சத்திய முழக்க வெளியீடு

# தேவனின் தோட்டத்து மலர்கள்




சத்திய முழக்கம் ஊழியங்கள்

**Rev. S.A. சுந்தரராஜ்**

வேலூர் - 632 006

# தேவனின் தோட்டத்து மலர்கள்

**Rev. S.A. சுந்தரராஜ்**
சத்திய முழக்க ஊழியங்கள்
வேலூர் - 6.

முதல் பதிப்பு : 2020

பிரதிகள் : 1000

Published by : **SATHTHIYA MULAKKAM MINISTRIES**
#22, I West Cross, West Gandhi Nagar,
Vellore - 632 006.

Printed by : Shammah Printers
Vellore

Price : **Rs. 50/-**

இந்தப் புத்தகத்தின் எந்தப்பகுதியையும்
ஆசிரியரின் முன் அனுமதியின்றி
மறுபதிப்பு செய்யக்கூடாது.

# பொருளடக்கம்

1. வனாந்தரத்து வாடா மலர் .... 7

2. பாலைவனத்தில் பூத்த இரட்சண்ய மலர் .... 19

3. ஆத்துமாவில் முள், ஆவியில் மலர் .... 31

4. சாம்பல் மலராயிற்று .... 43

5. சேற்றில் பூத்த மலர் .... 51

# முன்னுரை

கர்த்தருடைய பரிசுத்த நாமம் மகிமைப்படுவதாக. என் ஆவிக்குரிய தகப்பனார் **Rev. S.A. சுந்தரராஜ்** ஐயா அவர்களின் தியானச் செய்திகளில் மலர்ந்த மலர்கள் தான் **"தேவனின் தோட்டத்து மலர்கள்."** பலவிதமான மலர்களை ஒருங்கிணைத்து மீண்டும் நறுமணமாக வீசச்செய்த தேவனுக்கு ஸ்தோத்திரம்! இந்தப் புத்தகத் தோட்டத்தில் உள்ள ஒவ்வொரு மலர்களும் வாசிக்கும் ஒவ்வொருவரையும் உயிர்ப்பித்து மலரச் செய்யும், தேவனுக்கு சுகந்த வாசனையாக நறுமணம் வீசச்செய்யும்.

அழுகையின் பள்ளத்தாக்கை உருவ நடந்து அதை நீரூற்றாக மாற்றிக்கொண்ட யோபு வனாந்தரத்து வாடாமலர். எத்தியோப்பிய மந்திரி சரீரப்பிரகாரமாக பட்டமரமாக இருந்தாலும் ஆவியில் பூத்துக் குலுங்கும் பாலைவனத்து இரட்சண்ய மலர். நெருக்கங்கள், பாடுகள் ஆத்துமாவை முட்களாக குத்திக் கிழித்தாலும் தேவனின் வாக்குத்தத்தங்களை நம்பிக்கையோடு அணைத்துக்கொண்டதால் ஆவியில் சந்தோஷ மலர்கள் பூக்கின்றன. விசுவாசிகளின் தகப்பனாகிய ஆபிரகாம் மூலமாக நாம் கற்றுக்கொள்ளும் பாடங்கள் சாம்பலிலிருந்து வெளிப்படும் விசுவாச மலராக மலர்கிறது. அருவருப்பான பாவச்சேற்றிலிருந்து கர்த்தருக்காக நறுமணமாக மலர்ந்த அற்புதமான மலர் ராகாப்.

இந்தப் புத்தகத் தோட்டத்திலுள்ள விதவிதமான மலர்கள் வாடியிருக்கும் உள்ளங்களைத் தட்டியெழுப்பி நேசருக்காக வாசனை வீசிடச்செய்ய, பரிசுத்த ஆவியானவர் தாமே இந்தப் புத்தகத்தை வாசிக்கும் யாவர்மேலும் அசைவாடுவாராக. அன்பான போதகரின் இன்னும் கருத்தாழமிக்க தேவசெய்திகள் புதிய படைப்புகளாக மலர போதகரின் குடும்பத்தாருக்கு தேவன் கிருபைச் செய்வாராக. ஆமென்!

அன்பரின் பணியில்
**Rev. K. சாம் நப்தலி,**
ஏ.ஜி.சபை, சேண்பாக்கம், வேலூர்.

# வனாந்தரத்து வாடா மலர்

ஆலயம் இல்லை, பொதுத்தொழுகை இல்லை, பிரசங்கி இல்லை, வேதம் இல்லை, பெரிய வெளிப்பாடுகள் இல்லை, அற்புத அடையாளங்கள் இல்லை.... இப்படி ஒரு வனாந்தர ஊத்ஸ் தேசத்தில் எந்தச் சூழ்நிலைகளிலும் வாடாத ஒரு விசுவாச மலர்தான் பக்தன் யோபு. அவனது வாழ்க்கைச் சரித்திரம் நமக்கு முன் திறக்கிறது.

## 1. பாலைவனத்து மலர் :

“ஊத்ஸ் தேசத்திலே யோபு என்னும் பேர் கொண்ட ஒரு மனுஷன் இருந்தான். அந்த மனுஷன் உத்தமனும் சன்மார்க்கனும் கடவுளுக்குப் பயந்து பொல்லாப்புக்கு விலகுகிறவனுமாயிருந்தான்.” (யோபு 1:1)

பக்தன் யோபுவின் குடியிருப்பு ஊத்ஸ் தேசம். ஊத்ஸ் தேசம் ஏதோமின் சந்ததியின் இடம். “ஊத்ஸ் தேசவாசியாகிய ஏதோம் குமாரத்தியே, சந்தோஷித்துக் களிகூரு.” (புலம். 4:21) ஜான் கால்வின் என்பவர், “ஏதோம் ஏசாவின் சந்ததி, ஏசா கடவுளின் காரியங்களைத் தூர எறிந்தவன், சபிக்கப்பட்டவன்” எனும் கருத்தைக் கூறுகிறார். இந்தப் பொல்லாத சந்ததியின் குடியிருப்பில்தான் யோபு தோன்றினான். கடவுள் பயம், பக்தி, பரிசுத்தம் எதுவுமே இல்லாத ஆவிக்குரிய பாலைவனமே இந்த ஊத்ஸ் தேசம். இந்தப் பாலைவனத்தில் பூத்த மலர்தான் பக்தன் யோபு.

அவனைக் குறித்து யோபு என்னும் பேர் கொண்ட பராக்கிரமசாலி, ஒரு மன்னன் என்றெல்லாம் வேதம் சொல்லவில்லை. யோபு என்னும் பேர் கொண்ட ஒரு மனுஷன்

இருந்தான் என்றுதான் வேதம் சொல்கிறது. ஆம்! நம்மைப்போல ஒரு பாடுள்ள மனுஷன்தான் யோபு. சோதனைகளில் வாடாத மலராக இருந்த யோபு ஒரு சாதாரண மனிதன்தான். ஆகவே நாம் பின்பற்றக்கூடிய சாதாரண உதாரணம்தான் யோபு. நாம் பின்பற்ற முடியாத தெய்வீக அவதாரம் அல்ல யோபு.

மிதமிஞ்சிய கற்பனைக் காவியத்தின் நாயகன் அல்ல, யோபு ஒரு வரலாற்று மனிதன். இழப்பு, எதிர்ப்பு, நோய் இவைகளுக்கு மத்தியில் கொஞ்சமும் வாடாத மலர் யோபு. யோபுவின் வரலாற்றை ஒரு வரியில் சொன்னால் வாழ்வதற்காக மரித்த மனிதன். (A man died to live) தெய்வத்திற்குள் வாழும்படி உலகத்திற்கு மரித்தவனே யோபு.

## 2. கண்ணீரின் பாத்திரம் யோபு :

பாவ மனிதர்களுக்காக அழுகிறவன் யோபு. உடன்படிக்கைக்குத் தூரமான மக்களுக்கு மத்தியில் யோபு வாழ்ந்தான். யோபு என்றால் அழுகை என்று ஒரு பொருள் உண்டு. தன் காலத்தில் தெய்வ பயமில்லாமல் வாழ்ந்த மக்களை எண்ணி நிச்சயமாய் யோபு அழுதிருப்பான்.

“உம்முடைய வேதத்தை மனுஷர் காத்து நடவாதபடியால் என் கண்களிலிருந்து நீர்த்தாரைகள் ஓடுகின்றன” (சங் 119:136) என்று சங்கீதக்காரன் அழுவதுபோல யோபுவும் அழுதிருப்பான். யோபு மற்றவர்களுக்காக அழுதான் என்று வேதம் வெளிப்படையாகச் சொல்லவில்லை. அவன் பெயர் அழுகை என்றும் பொருள்படும். ஆகையால் கண்ணீர்த்தாரைகள் உள்ள மனிதன் யோபு.

சகோதரனே, நீ யாருக்காக அழுகிறாய்? பேச மாட்டாத விக்கிரகத்தின் முன் நின்று என்னைக் காப்பாற்று என்று மன்றாடும் கோடிக்கணக்கான மக்களை எண்ணி அழுகிறாயா? பட்டப்பகலில் பயங்கரக் கொள்ளை, சின்னஞ்சிறு மகளீர் மீது பாலியல் பலாத்காரம், இராக்காலங்களில் நடக்கும் துர்மனசாட்சியின் கொடுமை நாடகங்கள், உயர்ந்த பதவியில் இருப்போரின் வஞ்சக செயல்கள்... இவைகள் நிறைந்த நமது

நாட்டை எண்ணி அழுகிறாயா? நிச்சயமாய் யோபு ஊத்ஸ் தேசத்திற்காக அழுதிருப்பான்.

“இரவும் பகலும் நதியளவு கண்ணீர்விடு; ஓய்ந்திராதே. உன் ஆண்டவரின் சமூகத்தில் உன் இருதயத்தைத் தண்ணீரைப்போல ஊற்றிவிடு” என்று வேதம் நம்மை அழுகையின் பள்ளத்தாக்கிற்கு அழைக்கிறது. சகோதரனே, சும்மா இருக்காதே!

“அல்லற்பட்டு ஆற்றாது அழுத கண்ணீரே மாமன்னனையும் வாரிக்கொண்டு போய்விடும்” என்று உலக ஞானி கூறுகிறான். அக்கிரமம் ஒழிய ஆண்டவரின் பாதத்தில் அழு. அநியாயம் அகல அவர் கரங்களைப் பற்றிக்கொண்டு கதறி அழு. நள்ளிரவு வேளையிலும் உன் அழுகுரல் வானமண்டலத்தைக் கிழித்து கடவுளின் சிங்காசனம் முன் ஒலிக்கட்டும்.

## 3. ஊத்ஸ் தேசத்தில் யோபு தேவனது வித்து :

யோபு தேவனது சிறிய வித்து. வேதத்தின் மகத்துவங்கள் நிறைந்த ஒரு மரமல்ல யோபு. தெய்வபயம் நிறைந்த ஒரு சிறிய வித்து யோபு. இந்த வித்து முளைத்து, ஒரு மரமாக வளர்ந்து, உத்தமம் நீதி என்ற கனிகளோடு விளங்கியது. கடவுளற்ற தெய்வபயமில்லா மக்களுக்கு மத்தியில் நீ கடவுளின் வித்தாக இருக்கிறாயா?

உன் கிறிஸ்தவ வாழ்க்கைக்காக ஆராதனையில் ஆவிக்குரிய தானியங்களை உனக்காக மட்டுமே உன் ஆவியில் சேர்க்காதே. மற்றவர்களுக்கும் பயன்படும் விதைத் தானியத்தையும் சேகரி. ஆவியின்படி தரிசு நிலமாய்க் கிடக்கும் இதயங்களில் விதைக்க இந்த விதைத்தானியங்களை – ஜீவனுள்ள வார்த்தைகளை உன் ஆவியில் அன்றாடம் அள்ளிக் கொள்.

யோபு ஒரு விதைத் தானியம். அது விழுந்து செத்தது. அதனால் பொறுமை, விசுவாசம், அன்பு, தெய்வ பயம், நன்றி என்ற கனிகள் தோன்றின. நீயும் ஆவியின் கனி கொடுக்க

வேண்டுமெனில் சுயத்திற்கு, மாம்சீகத்திற்கு மரித்துவிடு. அப்பொழுது நீ கடவுளின் சந்ததியாக இருப்பாய். யோபுவைப்பற்றி வேதம் சொல்கிறது, நோவா, தானியேல், யோபு என்ற இம்மூன்று புருஷரும் (இஸ்ரவேல்) நடுவில் இருந்தாலும்... தாங்கள் மாத்திரம் தப்புவார்களேயல்லாமல்... வேறொருவரையும் தப்புவிக்கமாட்டார்கள். (எசேக். 14:14-16)

யோபு போன்ற பக்தனின் ஜெபத்தையும் கேட்கக்கூடாதபடி ஜனங்களின் மீறுதல்கள் அதிகமாயிருக்கிறது என்று வேதம் சொல்வதால் ஒன்றை விளங்கிக் கொள்கிறோம். அதாவது யோபு போன்ற பக்தர்களின் மன்றாட்டைக் கேட்டு மக்களை கடவுள் விடுவிப்பார் என்பதே பொதுவான கருத்து.

சகோதரனே, உன் காலத்து மக்களுக்குள் நீ யோபுவாக இருக்கிறாயா? நான் கிறிஸ்துவைப் பின்பற்றுகிறதுபோல நீங்கள் என்னைப் பின்பற்றுங்கள் என்று பவுல் சொல்வதுபோல உன் வாழக்கை அமைந்திருக்கிறதா? சாத்தான் கவனம் வைக்கும் அளவிற்கு யோபு பரிசுத்தவானாக வாழ்ந்தான். இயேசுவையும் அறிவேன்; பவுலையும் அறிவேன் என்று சொல்லும் சாத்தான், உன்னையும் அறிவேன் என்று சொல்ல வேண்டும். இயேசுவையும் அறிவேன், பவுலையும் அறிவேன், நீ யார் என்ற சாத்தான் உன்னைப் பார்த்துக் கேட்கக்கூடாது. (அப். 19:15)

## 4. கடவுளுக்கு எப்பொழுதும் ஒரு சந்ததி எங்கும் உண்டு :

ஆபிராகமின் காலத்தில் கடவுளைப்பற்றிய வெளிச்சம் மிகப்பிரகாசமாக இல்லை. அன்றைய உலகில் ஆபிரகாமே கடவுளின் சந்ததி. ஆனால் கடவுளின் சந்ததி என்று இன்னொருவனையும் நாம் வேதத்தில் சந்திக்கிறோம்.

திடீரென்று உன்னதமான கடவுளினுடைய ஆசாரியனாயிருந்த சாலேமின் ராஜாவாகிய மெல்கிசெதேக்கு அப்பமும் திராட்சரசமும் கொண்டுவந்து ஆபிரகாமை ஆசீர்வதித்தான். (ஆதி 14:18) இந்த மெல்கிசெதேக்கு அன்றைய

உலகில் கடவுளின் சபைக்கு அடையாளமாக இருந்தான். இவன்தான் கடவுளின் மறைவான சந்ததி.

அவன் கொண்டு வந்தவை அப்பமும் ரசமும். அப்பம் ஜீவனையும் ரசம் மகிழ்ச்சியையும் குறிக்கின்றன. ஆபிரகாம் கலக்கத்தில் இருந்த நாளில் வாழ்வையும் மகிழ்ச்சியையும் கடவுளின் சந்ததியான மெல்கிசெதேக்கு கொடுத்தான்.

நீ கடவுளின் சந்ததியெனில் கண்ணீரின் பள்ளத்தாக்கில் இருக்கும் ஜனங்களுக்கு ஜீவனும் சந்தோஷமாக இருக்கிறாயா? தன் காலத்தில் உள்ள மக்களுக்கிடையில் யோபு அப்பமாகவும் ரசமாகவும் இருந்தான். மற்றவர்களைப் போஷிப்பிக்கும் கடவுளின் சந்நிதியைக் சுமந்து செல்லும் கடவுளின் சந்ததியாக நீ இருக்கிறாயா?

யோபுவின் வெளிப்பாடு, மங்கிய வெளிச்சமாகத்தான் இருந்தது. ஆனால் ஆத்துமாக்களைப் பிரகாசிக்கும் வல்லமையுடையது அவனது வெளிப்பாடு. உன் தெய்வீக வெளிப்பாடு பரபரப்புக் காட்சியா? பரலோகத்தின் வல்லமையா?

## 5. யோபு ஞானத்தால் நிறைந்தவன் (யோபு 1:4)

கர்த்தருக்குப் பயப்படுதலே ஞானத்தின ஆரம்பம். யோபு தெய்வ பயமுள்ளவன். பலி செலுத்துவதிலும் ஜெபம் பண்ணுவதிலும் யோபு மிகவும் கவனமாக இருந்தான். ஆனாலும் குடும்பக் கூடுகை, விருந்து இவைகளையும் யோபு அலட்சியம் செய்யவில்லை.

சில பெற்றோர்கள் தங்கள் பிள்ளைகளை எப்பொழுதும் ஜெபக்கூட்டம், ஆராதனை, நற்செய்திக்கூட்டம், உபவாசக்கூட்டம் இவைகளுக்கு மட்டுமே அழைத்துச் செல்கின்றனர். இப்படிச் செய்வதினால் அவர்களுக்கு ஜெபத்தின் மீதே வெறுப்பு ஏற்பட்டு ஆலயம், ஆராதனை இவைகளை மெதுவாகத் தவிர்த்து விடுகின்றனர். நல்ல ஆவிக்குரிய ஆராதனையுள்ள சபைகளை விட்டு விலகி ஆரவாரம், ஆர்ப்பரிப்பு போன்ற ஆத்தும கிளர்ச்சியுள்ள சபைகளை நாடி ஓடுகின்றனர்.

யோபுவின் வீட்டில் குடும்ப விருந்து உண்டு. ஏழு சகோதரர்களும் மூன்று சகோதரிகளும் ஒரு வீட்டில் கூடி விருந்துண்டு மகிழ்வது, யோபுவின் பிள்ளைகளின் வழக்கம். யோபு இதற்கு அனுமதியளித்திருந்தான். ஆனால் தகப்பனாகிய அவன் விருந்திற்குச் செல்லவில்லை.

வயதான தன்னுடைய முன்னிலையில் தன் பிள்ளைகள் எல்லா சுதந்தரங்களையும் சுருட்டிவைத்துக்கொள்ளும் தர்ம சங்கடமான நிலைக்கு அவர்களை யோபு தள்ளவில்லை. சில வீடுகளில் இப்படிப்பட்ட சூழ்நிலைகளில் பெற்றோர்கள் தங்கள் ஆதிக்கத்தைச் செலுத்தி பிள்ளைகளின் இயல்பான சந்தோஷத்தை, உரிமையைப் பறித்து விடுகின்றனர். இதிலே யோபு மிகவும் ஞானமுள்ளவனாய் இருந்தான்.

## 6. கர்த்தரின் பிள்ளைகளின் விருந்து (யோபு 1:4)

விருந்து வீட்டில் பத்துப் பிள்ளைகளும் கூடியிருப்பார்கள். "இதோ சகோதரர்கள் ஒருமித்து வாசம்பண்ணுவது எத்தனை நன்மையும் எத்தனை இன்பமுமானது" (சங் 133 : 1) என்று வேதம் மகிழ்கிற வீடு யோபுவின் பிள்ளைகளின் வீடு. ஏதேனும் பிரச்சனை இருந்தால் ஒருவருக்கொருவர் பேசித்தீர்த்துக் கொள்ளும் நல்ல வாய்ப்பு இருந்தது. கருத்து வேறுபாடு இருக்குமெனில் பேசித்தீர்த்துக் கொள்வதுதான் சரி.

ஆனால் பல வீடுகளில் மௌன நிலைக்குத் திரும்பி விடுகின்றனர். இதனால் பயங்கரச் சூறாவளியாய் எழும்பி வரும் சண்டைகள் அடங்கிவிட்டாலும் தீடீரென்று அக்கினி கொட்டும் எரிமலைகளாகவே அவர்கள் இருதயங்கள் மாறிவிடுகின்றன. யோபுவின் பிள்ளைகளின் இருதயங்கள் தெளிவான இருதயங்கள், எப்பொழுதும் மனம்விட்டுப் பேசுகின்ற அருமையான கர்த்தரின் பிள்ளைகள்.

பரிசுத்த பவுல் சிறையில் இருக்கிறார். அவருடைய உள்ளம் சபையிலுள்ள ஒரு பிரச்சனையைச் சுற்றிவட்டமிடுகிறது. எயோதியாள், சிந்திகேயாள் என்ற இரு ஆவிக்குரிய சகோதரிகள் ஒருவருக்கொருவர் பேசமாட்டார்கள். இது பவுலின் உள்ளத்தை வறுத்தியது. உடனே தன் சிறையிருப்பிலிருந்து பிலிப்பு சபைக்கு

எழுதுகிறார், "கர்த்தருக்குள் ஒரே சிந்தையாயிருக்க எயோதியாளுக்கும் சிந்திகேயாளுக்கும் புத்தி சொல்கிறேன்." (பிலி 4:2) இரண்டு விசுவாசிகள் பேசாதிருக்கும் பகைமையைப் பரிசுத்த பவுலினால் சகித்துக்கொள்ள முடியவில்லை. பக்தன் யோபுவிற்கு இப்படிப்பட்ட மன வருத்தமே கிடையாது. அவன் பிள்ளைகள் பகையின்றி வாழ்ந்தார்கள்.

தங்கள் மூன்று சகோதரிகளையும் தங்களோடே போஜனம் பண்ணும்படி அழைப்பார்கள். (யோபு 4:5) தங்கள் தங்கள் முறைப்படி சகோதரர்கள் ஒரு வீட்டில் கூடும்பொழுது சகோதரிகளுக்கு மட்டும் பிரத்தியேகமாக அழைப்பு கொடுக்கப்பட்டன. சகோதரிகள் சீக்கிரம் உணர்ச்சி வயப்படுகிறவர்கள். கோபம், வெறுப்பு இவைகள் அவர்களுக்கு எவ்விதத்திலும் வந்துவிடக் கூடாது என்று பிரத்தியேகமான அழைப்பைச் சகோதரிகளுக்கு கொடுத்தனர்.

சகோதரனே, எளிதில் உணர்ச்சி வயப்படுகின்றவர்களுக்கு விசேஷமானக் கவனத்தைச் செலுத்து. சிலர் எப்பொழுதும். எதனையும் எதிர்ச்சிந்தனையோடு நோக்குவார்கள். சிலர் சந்தேப்பார்வையோடு இருப்பார்கள். யாவருக்கும் நீங்கள் மனம் திறந்த பார்வையோடு அழைப்பைக் கொடுங்கள். குடும்ப ஒற்றுமையில் கவனமாயிருங்கள்.

விருந்து மனமகிழ்ச்சியின் நேரம். கடவுளைக்கூட மறந்துவிடும் சூழ்நிலை ஏற்பட்டுவிடலாம். ஆம்! வாழைப்பழத்தை கையிலெடுத்தவுடன், கடவுளே ஸ்தோத்திரம் என்று சொல்லத் தவறிவிடலாம். ஆனால் அதே வாழைப்பழத்தோலில் வழுக்கி கீழே விழும்பொழுது, ஐயோ கடவுளே என்று நிச்சயமாய்க் கூப்பிடுவோம். விருந்து வேளையில் ஒருவேளை தன் பிள்ளைகள் தங்கள் இருதயத்தில் கடவுளைத் தூஷித்து பாவஞ்செய்திருப்பார்களோ என்று தன் உள்ளத்தில் மிகுந்த எச்சரிப்பை எடுத்தான் யோபு. (யோபு 1:5)

"நான் பரிபூரணம் அடைகிறதினால் மறுதலித்து கர்த்தர் யார் என்று சொல்லாதபடிக்கு.... என் படியை எனக்கு அளந்து என்னைப் போஷித்தருளும்" (நீதி. 30:9) என்கிறான் ஞானி.

தன் பிள்ளைகளும் பரிபூரணமாக விருந்துண்டதினால் கர்த்தரைத் தூஷித்திருப்பார்களோ, பரியாசம் பண்ணியிருப்பார்களோ என்று தன் பிள்ளைகளை வரவழைத்துப் பலி செலுத்துவான்.

விருந்து முடிந்த மறுநாள் அதிகாலையிலே அவர்களுக்கு பாவ நிவாரணப்பலி செலுத்தி தன் பிள்ளைகள் பாவத்தினால் மூடப்பட்டிருக்கக்கூடாது என்று பலியினால் மூடினான். உன் வீட்டார் ஜெபத்தால் மூடப்பட்டிருக்கிறார்களா? கவனமெடுங்கள்.

## 7. கர்த்தரின் பாதுகாப்பு (யோபு 1:10)

யோபு, அவன் குடும்பம், அவன் சொத்து, சுகம் எல்லாமே கர்த்தரால் வேலியடைத்துக் காக்கப்பட்டன. கர்த்தரின் பிள்ளைக்கு எப்பொழுதுமே பாதுகாப்பு உண்டு. ஆண்டவருடைய திராட்சைத் தோட்டத்திற்கு 3 வித பாதுகாப்பு உண்டு.

1. வேலியடைப்பு
2. கற்களை நீக்குதல்
3. உயர்தரம்

ஆகிய மூன்று பாதுகாப்பு திராட்சைத்தோட்டத்திற்கு உண்டு. “அவர் வேலியடைத்து அதிலுள்ள கற்களைப்பொறுக்கி அதிலே நற்குல திராட்சைச் செடிகளை நட்டார்.” (ஏசா 5:2) யோபு இப்படிப்பட்ட திராட்சைத்தோட்டமாக இருந்தான். அவனைச் சுற்றிலும் பாதுகாப்பு வேலி இருந்தது. அவன் சந்தோஷ வாழ்விற்கு வரும் தடைக்கற்கள் எல்லாவற்றையும் கர்த்தர் நீக்கி இருந்தார். யோபுவும் நற்குலச் செடிபோல உத்தமனும் நீதிமானுமாயிருந்தான்.

சாத்தான் இந்தப் பாதுகாப்பை உடைத்துக் கொண்டு யோபுவை துன்பத்துக்குள்ளாக்கவில்லை. குறுக்கு வழியிலும் பிரவேசிக்கவில்லை. கடவுளின் அனுமதிச்சீட்டோடு நேர்வழியில் சென்றான். யோபுவின் வாழ்க்கையில் சாத்தான் பக்கவழியாய் வரவில்லை.

சில சமயங்களில் சாத்தானுக்கு கடவுள் இப்படி உத்தரவு கொடுப்பார். ஆனால் நிபந்தனையோடுதான் இந்த உத்தரவு

இருக்கும். யோபுவின் மேல் சாத்தானுக்குக் கொடுத்த உத்தரவு ஒரு அபூர்வமான சந்தர்ப்பம். சாத்தானின் நோக்கம் கடவுளுக்கும் அவருடைய பிள்ளைக்கும் மத்தியில் பிரிவினை உண்டாக்குவதே.

சாத்தானின் நம்பிக்கை கடவுள் தரும் பாதுகாப்பிற்காகவே மனிதன் கடவுளைத் தொழுதுகொள்கிறான். இந்த சாத்தானின் நம்பிக்கையை அவமாக்கவே கர்த்தர் சாத்தானுக்கு யோபுவின்மேல் அதிகாரம் கொடுத்தார். மீண்டும் மீண்டும் இதே காரியத்திற்கு சாத்தானுக்கு அதிகாரம் கொடுத்தார்.

பேதுருவைச் சோதிக்குபடி சாத்தான் கர்த்தரிடம் அனுமதி கேட்டான். கோதுமையைச் சுளகினால் புடைக்கிறதுபோல சாத்தான் இயேசுவிடம் உத்தரவு பெற்றுக் கொண்டான். ஆனாலும் கோதுமையைச் சாப்பிட உத்தரவில்லை.

உலக அதிகாரம் சிங்கக் குகைக்குள் உன்னைத் தள்ளலாம், ஆனால் சிங்கத்தின் வாய்க்குள் உன்னைத் தள்ள அவர் உத்தரவு வேண்டும். அரசாங்கம் அக்கினிச் சூளைக்குள் உன்னைத் தள்ளலாம். ஆனால் தீ நாக்குகள் உன்னைத் தீண்ட அவர் உத்தரவிட்டால் மாத்திரமே முடியும்.

யோபுவின்மேல் மாத்திரம் உன் கையைப்போடாதே என்று கர்த்தர் எல்லைக் கோட்டைப்போட்டார். சாத்தான் இன்னும் தன் சோதனையைக் கடுமையாக்கினபொழுது அவன் ஜீவனைத் தொடாதே என்று எல்லைக் கோட்டைப்போட்டார். ஆகவே எந்தச் சூழ்நிலையிலும் யோபுவிற்கு பாதுகாப்பு இருந்தது. சகோதரனே, உன் இழப்புகள், நஷ்டங்கள் எல்லாவற்றிலும் கிறிஸ்துவுக்குள் நீ பாதுகாப்பாய் இருக்கிறாய்.

## 8. சாத்தானின் செயற்திட்டங்கள் :

தன் திட்டங்கள் நிறைவேற்ற சாத்தான் கர்த்தரின் சந்நிதியை விட்டுப் புறப்பட்டான். (யோபு 1:12) ஒருவன் தீமை செய்யவேண்டுமெனில் முதலாவது கடவுளின் சமூகத்தைவிட்டு வெளியேற வேண்டும்.

இயேசுவைக் காட்டிக்கொடுக்க யூதாஸ் செய்த முதற்காரியம் திருவிருந்து வேளையில் இயேசுவின் சமூகத்தைவிட்டு வெளியேறினான். சகோதரனே, உனக்குள் கர்த்தரின் சமூகத்தைக் காத்துக்கொள். அவருடைய சமூகத்தை இழந்தால் நீ சாத்தானின் குடியிருப்பாக மாறிவிடுவாய். சாத்தான் வெளிப்புற பாதுகாப்பை உடைத்து எறிவான். ஆனால் கர்த்தருக்குள் நீ பத்திரமாக இருக்கிறாய்.

சாத்தான் கால்நடைச் சொத்தை அழித்துவிட்டு அதைத் தான் செய்யாதபடி ஒளிந்துக்கொள்கிறான். மனிதர்கள் அதைச் செய்ததுபோல சபேயர்களை வைத்து தன் திட்டத்தை முடித்தான். தேவனுடைய அக்கினி விழுந்தது என்று கடவுளே செய்ததுபோல் சாத்தான் தந்திரமாகக் காட்டிவிட்டான்.

சாத்தானின் செயலைக் கவனியுங்கள். சபேயர் எருதுகள், கழுதைகள் இவைகளை ஓட்டிக்கொண்டு போனபொழுது அவைகள் என்ன செய்துக்கொண்டிருந்தனவென்று கவனியுங்கள், "எருதுகள் உழுகின்றன; கழுதைகள் மேய்கின்றன." (யோபு 1:14) ஆம்! எல்லாமே ஒழுங்காக நடைபெற்றுக் கொண்டிருந்தன. அப்பொழுதுதான் திடீரென்று ஆபத்து வந்தது. இதிலிருந்து ஆவிக்குரிய பாடம் ஒன்றைக் கற்போம்.

பாஸ்டர், எங்கள் மூத்த பையனுக்காக ஜெபம் பண்ணுங்கள். தெய்வ பயமில்லாமல் இருக்கிறான். திருட்டு, பொய் இப்படி பிசாசாகவே மாறிவிட்டான். இப்படி பெற்றோர்களின் மன்றாட்டு. அப்படியா? சின்ன பையனுக்கு ஜெபம் பண்ணவேண்டாமா? பாஸ்டர் சின்னவன் உண்மையில் தேவதூதனைப்போல! இப்படி பெற்றோர்கள் வெளியரங்கமான காட்சியில் ஏமாந்து விடுகின்றனர்.

இளையவன் எப்பொழுதும் புத்தகமும் கையுமாக இருக்கிறான். ஆனால் பாடப்புத்தகத்திற்குள் அசுத்தமானப் புத்தகம்! வீட்டை விட்டுப் புறப்படுவது மாலை வகுப்புக்கு; உண்மையில் செல்வது களியாட்டுக்கு. இப்படி பார்வைக்கு ஒழுங்காகத் தோன்றுவதெல்லாம் சாத்தானின் வலைக்குள்

விழுவதைப் பார்க்கிறோம். ஆகவே ஒழுங்கும் கிரமுமாகத் தோன்றுவதற்கும் ஜெபியுங்கள்.

## 9. சோதனைச் சூறாவளியில் வாடா மலர் (யோபு1:21,22)

ஒரே நாளில் அவனது பத்துப்பிள்ளைகளும் செத்து மடிந்தனர். விருந்து சாலை மரணப்பள்ளத்தாக்காக மாறிவிட்டது. கால்நடைச் செல்வங்கள் அனைத்தும் கொள்ளையாயின. வேலைக்காரர்கள் அக்கினிக்கு இரையாயினர். இப்படி யோபு எல்லாவற்றையும் இழந்தான். மரணம் தன் கோரமான கரத்தால் யோபுவின் வீட்டை அசைத்துவிட்டது. யோபுவின் இதயம் உடைந்தது.

விசுவாசம் என்பது உணர்ச்சியற்ற வாழ்க்கை அல்ல. யோபு தன் ஆடைகளைக் கிழித்தான். தலையைச் சிரைத்தான். தரையிலே வீழ்ந்தான். அவனது சஞ்சலமும் ஒரு அளவுக்குத்தான். அவன் துக்கம் தரையில் அவனை விழச்செய்தது. அது மிகவும் மிதமிஞ்சி அவனைத் தரைக்குக் கீழே கொண்டு போகவில்லை. அவன் ஆவி கலங்கவில்லை. "கர்த்தர் கொடுத்தார், கர்த்தர் எடுத்தார்" என்று கர்த்தருக்குள் தன்னைத் திடப்படுத்தினான்.

கடவுள் ஒன்றினைத் தரும்பொழுது இதனைத் திரும்ப எடுத்துக்கொள்ள எனக்கு உரிமை உண்டு என்ற சொல்லித்தான் தருகிறார்.

எல்லாமே கிருபையால் கிடைத்தது. நான் நிர்வாணியாய் அதாவது ஒன்றுமேயில்லாமல் இவ்வுலகிற்கு வந்தேன். மீண்டும் நான் நிர்வாணியாகப் போகும்பொழுது அதாவது ஒன்றையுமே எனக்கு என்று பற்றிக்கொள்ள முடியாத நிலையில், நாம் இதயத்தில் பதித்துக்கொள்ள வேண்டிய ஒரு சத்தியம் உண்டு, "உலகை விட்டுப்புறப்பட ஆயத்தமாயிரு" என்பதே. உலகம் அநித்தியம் என்பதை உணர்ந்த யோபு நித்தியமான கடவுளையே தன் செல்வமாக சொத்தாக எண்ணினான்.


இவ்வுலகத்திலே "நிலையற்ற ஐசுவரியத்தின் மேல் நம்பிக்கை வையாமலும் நாம் அனுபவிக்கிறதற்குச்

சம்பூரணமாய்க் கொடுக்கிற ஜீவனுள்ள கடவுள் மேல் நம்பிக்கை வையுங்கள்" (1 தீமோ 6:17) என்ற அறிவுரை மங்காத விளக்காக எரியட்டும். அழிவு, மரணம், திகில் இவைகளுக்கு மத்தியில் ஸ்தோத்திரம் என்ற நறுமணத்தோடு கர்த்தரின் தோட்டத்தில் பூத்த புது மலர்தான் யோபு. அந்த மலர் வாழ்க்கையின் வனாந்தரத்தில் வாடாத மலர். காரணம் அவனது அஸ்திபாரம் கர்த்தர் பேரில் உள்ள விசுவாசமே.

ஒரு வரலாற்றுச் சம்பவத்தைச் சுட்டிகாட்ட விரும்புகிறேன். அமெரிக்காவில் உலக வர்த்தகக் கட்டிடங்கள் தீவிரவாதிகளால் தகர்க்கப்பட்டு நூற்றுக்கணக்கான மக்கள் மரணத்தைத் தழுவினர். பல கோடிக்கணக்கான ரூபாய் மதிப்புள்ள செல்வங்கள் எரிந்து அழிந்தன. உலகைப்பிரமிக்க வைத்த வர்த்தக மாளிகைகள் தரைமட்டமாயின. அப்பொழுது அஞ்சாத வீரராக அமெரிக்க ஜனாதிபதி ஜார்ஜ் புஷ் கூறிய வார்த்தைகள்,

***"The structure is gone, we have the foundation;
Let us build it again – Yes! The foundation is
Christ Jesus"***

யோபு வாழ்க்கை கட்டடத்தை இழந்தான். ஆனால் அஸ்திபாரமான கடவுள் நம்பிக்கையை அவன் இழக்கவில்லை. ஆகவே அவன் வாடாத மலராக விளங்கினான்.



# பாலைவனத்தில் பூத்த இரட்சண்ய மலர்

உலகில் இருவகை மக்கள். தனித்தே வாழும் கூட்டம்; எவரோடும் கலந்து வாழும் கூட்டம். மனிதன் தனித்து நின்று விட்டால், கடவுள் அவனுக்கு வைத்திருக்கும் செய்தி அவனுக்குள்ளேயே அடங்கிக்கிடக்கிறது. பலருக்கும் அந்தச் செய்தி கிடைக்க வேண்டும் என்ற தெய்வ நோக்கம் நிறைவேறாமல் போய்விடுகிறது. எவ்விதத் தடையுமின்றி எவரோடும் பழகினால் அவனுக்குள்ளிருக்கும் தேவநோக்கம், கலப்படமாகி தன் தூய்மையை இழந்துவிடுகிறது.

இஸ்ரவேல் தேசத்திடம் இந்த இரண்டு சுபாவங்கள் உண்டு. பெருமையினால் நிறைந்து, பக்தி வைராக்கியத்தால் மற்றவர்களோடு கடுகளவும் கலவாத பரிசேயரால், மற்றும் மேட்டுக்குடி மக்களால் தேவ செய்தி மற்றவர்களுக்குப் பரவ முடியாமற் போய் விட்டது. தேவ செய்தி இஸ்ரவேலுக்குள்ளேயே அடங்கிவிட்டது. மற்றவர்களோடு எளிதில் கலந்துவிடும் கூட்டத்தால், இஸ்ரவேலில் விக்கிரக ஆராதனை உருவாயிற்று. தேவ செய்தி அவர்களுக்குள் கெட்டுப்போயிற்று. இத்தகையச் சூழ்நிலையில் விக்கிரக ஆராதனை நிறைந்த எத்தியோப்பியா தேசத்திலிருந்து அந்நாட்டு நிதி மந்திரி, எருசலேமிலிருந்து வனாந்தர மார்க்கமாய் தன் தாய் நாட்டிற்குத் திரும்பிக் கொண்டிருக்கிறான்.

அப்பொழுது சமாரியாவில் வல்லமையான ஊழியத்தை பிலிப்பு என்னும் தேவ மனிதன் நிறைவேற்றிக் கொண்டிருக்கிறான். திடீரென்று தேவதூதன், பிலிப்புவை நோக்கி, “நீ எழுந்து காசா பட்டணத்துக்குப் போகிற வனாந்தர மார்க்கமாய்ப் போ” என்றார். (அப். 8: 26)

## வனாந்தர மார்க்கம் :

காசா எனும் பெலிஸ்தியர் பட்டணத்திற்கு இரண்டு சாலைகள் இருந்தன. ஒன்று அருமையான வர்த்தகப்பாதை. மற்றொன்று கரடுமுரடான பாலைவனப்பாதை. இந்த வனாந்திரப்பாதையைத்தான் தேவன் பிலிப்புவிற்குக் காட்டினார். உலகப்பாதைகள் அகன்ற, அழகிய பாதைகள்! ஆண்டவரின் பாதை நெருக்கம், பள்ளம், மேடு நிறைந்தது.

உலகம் தன் செய்தியை அகலப்பாதையில் அனுப்புகிறது. சினிமா, T.V. சேனல் நாவல்கள் உலகக் செய்தியைச் சுமந்துவரும் அகலப் பாதை சொகுசுப் பாதை. இந்தப் பாதை வழியாய் சுவிசேஷம் பயணிக்காது. வேர்வை, கண்ணீர், இரத்தம் எனும் பாதை வழியாகவே கிறிஸ்துவின் நற்செய்தி மெல்ல நடைபோடுகிறது. வனாந்திர மார்க்கமாகவே பிலிப்பு கடந்து வந்தான். மனுஷீக எண்ணத்தில் இந்தப் பாதையில் தான் தேவசித்தம் இருந்தது. வசதியானப் பட்டணத்தைவிட்டு தேவ சித்தத்திற்கு கீழ்ப்படிந்து வானந்திர மார்க்கத்தில் பிலிப்பு நடக்க ஆரம்பித்தான். இது சங்கடத்தின் பாதையாய் இருந்தாலும் இதுதான் சத்தியத்தின் பாதை. வேறு நேரானப் பாதைகள் இருந்தாலும் அவை ஆவிக்கேற்ற சீரானப் பாதைகளல்ல.

சகோதரனே! சகோதரியே! உன் மாம்சீகமும் உன் புத்திசாலித்தனமும் உனக்கு சோலைகள் நிறைந்தப் பாதையைக் காட்டலாம். ஆனால் ஆவியானவர் பாலைவனப் பாதையையே காட்டினால் நீ பாலைவனப் பாதையையே தெரிந்தெடுத்துக் கொள். வசதி என்று வளமானப் பாதையை தெரிந்தெடுக்காதே. அப்பத்தின் வீடாகிய பெத்லகேமின் தானியக் களஞ்சியங்கள் வெறுமையாகிவிட்ட நிலையில் அங்கேயே நின்றுபிடிக்க வேண்டிய தேவமக்கள் வளமான மோவாபின் தானியக் களஞ்சியங்களைத் தேடி வந்தபடியால் வாழ்க்கையே கல்லறைத் தோட்டமாயிற்று. இதுதான் நகோமியின் சரித்திரம். உன் வாழ்க்கைச் சரித்திரம் இப்படி துயர சரித்திரமாய் மாறக் கூடாது. பஞ்சமோ, பசியோ, தாழ்ச்சியோ, குறைவோ, வறுமையோ, வாட்டமோ தேவ சித்தத்தில் நிலைத்திருங்கள். தேவசித்தப்படி பிலிப்பு பயணம் செய்துக் கொண்டிருந்தான்.

“அப்பொழுது எத்தியோப்பிய ராஜஸ்திரியாகிய கந்தாகே என்பவளுக்கு மந்திரியும், அவளுடைய பொக்கிஷம் எல்லாவற்றுக்கும் தலைவனுமாயிருந்த எத்தியோப்பியனாகிய ஒருவன் பணிந்துக் கொள்ளும்படி எருசலேமுக்கு வந்திருந்தான்.” (அப். 8:27) பிலிப்பு வனாந்திர மார்க்கமாய் வந்துக் கொண்டிருக்கும்போது எருசலேமிலிருந்து எத்தியோப்பிய மந்திரி தாய் நாட்டுக்குத் திரும்பிக் கொண்டிருந்தான். இவனைச் சந்திப்பதற்கத்தான் ஆவியானவர் பிலிப்புவை அனுப்பியிருந்தார். இவன் யார்? நாம் சற்று ஆராய்வோம்.

## 1. இவன் ஒரு நிதி மந்திரி :

தேசத்தின் பொருளாதாரமே இவன் கையில் தான் இருந்தது. நாட்டின் வரவு செலவு பார்ப்பது எளிதானக் காரியமல்ல. இந்த மிகுந்த பணிகளுக்கு மத்தியில் இவன் தேவனைத் தேட சமயமெடுத்தான். தேவனைத் தேட முடியாத அளவுக்கு அவனுக்கு நெருக்கமான வேலையாய் இருந்தபோதிலும் அவன் கர்த்தரைத் தொழுதுக் கொள்வதற்கு இருநூறு கல் தூரம் பிரயாணம் செய்தான். இந்தப் பிரயாணத்திற்காக இவன் சில நாட்களை ஒதுக்க வேண்டியதாயிற்று. சகோதரனே! நீ தேவனுக்காக நேரம் ஒதுக்குகிறாயா? “மழைப் பெய்தாலும், வெயிலடித்தாலும் தேவனுக்கு ஊழியம் செய்வேன் என்று ஆரவாரமாய் பாடினாயே! வானத்தில் மேகக் கூட்டங்களைக் கண்டவுடன் மழைவரும் என்று பயந்து ஆராதனைக்கு வராமலேயே நின்றுவிட்டாயே. ‘எத்தனை இன்னல்கள் என் வாழ்வில் வந்தாலும் உம்மை மறவேன்’ என்று பாடினாயே சகோதரியே! சின்னஞ்சிறு பிரச்சனைக்கெல்லாம் நீ ஆராதனையை தவறவிட்டு விட்டாயே. நாட்டின் மிகப்பெரிய வேலைக்கு மத்தியில் இந்த நிதி மந்திரி கடவுளைத் தேடுவதை மறக்கவில்லையே.

## 2. அவன் ஒரு அண்ணகன் :

இந்த நிதி மந்திரி பிறப்பினால் ஆண் தன்மையற்றவன். அப்படியிருந்திராவிட்டால், ஆண் தன்மையற்றவனாக ஆக்கப்பட்டிருக்க வேண்டும். ஆகவே வேதச் சட்டப்படி இவன்

ஆலயத்திற்குள் நுழைய முடியாது. (உபா. 23:1) எருசலேம் தேவாலயத்திற்குள் தன்னால் நுழைய முடியாது என்று அவனுக்குத் தெளிவாய்த் தெரியும். அன்றைய சட்டங்கள் தன்னைத் தேவாலயத்தின் வாசற்படியில் தடுத்து நிறுத்திவிடும் என்று அவனுக்குத் தெரியும், என்றாலும் கர்த்தரைத் தொழவேண்டும் என்ற அவனது ஆசையை எந்தச் சூழ்நிலையாலும் தடுத்து நிறுத்த முடியவில்லை. என் அருமை சகோதரனே! நீயோ அற்ப சொற்பக் காரியத்திற்கெல்லாம் ஆராதனையை விட்டுவிடுகிறாயே.

வேதச்சட்டத்தைக் காட்டியே அவனைத் தேவாலய வாசற்படிக்கட்டுகளிலேயே நிறுத்திவிட்டது அன்றைய சமுகம். ஆனாலும், ஆண்டவரைத் தொழவேண்டும் என்ற வாஞ்சை இதயத்தில் மேலோங்கி நிற்கவே, அவன் எந்தத் தடையும் பாராது, நெடும் பயணம் மேற்கொண்டு, எருசலேம் ஆலயத்திற்கு வந்தான்.

சகோதரனே! இந்தச் சபையில் உன்னை மதிப்போர் ஒருவருமில்லை என்று மனம் கசந்து, வேறு சபை நோக்கி நடந்துவிட்டாயே! இப்படியே வருத்தம், வாட்டம் இவற்றிற்கெல்லாம் சபை மாறிக் கொண்டேயிருந்தால் கிறிஸ்து வருவதற்குள், சபைகளைச் சுற்றிவரும் ஓட்டமே முடியாதே!. "நில் இங்கே" என்று ஆலயம் தன்னை வெளிப்பிரகாரத்திலே நிறுத்திவிடும் என்றாலும், செல் அங்கே என்ற மனசாட்சியின் சத்தம் கேட்டு, நிதி மந்திரி நடந்ததினால், அவன் மதி மந்திரியாக விளங்கினான்.

## 3. தொழுகிறவன் :

அவனிடம் காணப்பட்ட மூன்றாவது சிலாக்கியம் அவன் கடவுளைத் தொழுகிறவன். எத்தியோப்பியா தேசம் விக்கிரகம் நிறைந்த ஓர் நாடு. அவனுடைய அரசியும் ஒரு விக்கிரக ஆராதனைக்காரியே. இவன் எப்படியோ தேவனைப்பற்றி அறிந்தான். தான் பெற்ற அறிவில் அவன் உண்மையுள்ளவனாயிருந்தான். மெய்யானத் தேவனைப்பற்றிய முழு அறிவும் அவனுக்கில்லைதான். யூத மார்க்கமும் அவனுக்கு

இடம் கொடுக்காமல், அவனை ஒதுக்கிவைத்துவிட்டது. ஆனாலும் அவன் இதயத்தில் உண்மை ஆராதனை நடந்தது. அவனைப் பரிசேயக் கூட்டம் விசுவாசி என்று சேர்த்துக் கொள்ளாது. யூத மார்க்கம் அவனை அன்னியனாகவே எண்ணும். 'தொழுது கொள்கிறவன்' என்று சமூகம் அவனுக்கு ஓர் மலிவுப் பட்டத்தை வழங்கியிருந்தது.

செசரியா பட்டணத்தில் கொர்நெலியு என்ற பக்தியுள்ள ஒரு மனிதன் இருந்தான். இவனை யூத மார்க்கம் அங்கீகரிக்கவில்லை. இவனை முற்றிலும் அந்நியன் என்றும் ஒதுக்கிவிட முடியாது. ஆகவே அவனுக்கு "தேவனுக்குப் பயப்படுகிறவன்" என்று அவனுக்கு அன்றைய சமூகம் அவனுக்குப் பட்டம் கொடுத்தது. இந்தப் பட்டங்களெல்லாம் யூதமார்க்கத்துக்கு அமைந்தவன் என்பதைவிட தாழ்வானவை. இந்த நிலைமையில் தான் எத்தியோப்பிய நிதி மந்திரியை அன்றைய சமுதாயம் வைத்திருந்தது. தேசத்தில் உயர்ந்தப் பதிவியில் இருந்தான். ஆனால் ஆவிக்குரிய உறவிலோ ஓரங்கட்டப்பட்டுவிட்டான். ஆனாலும் அவன் அறிந்த தேவ ஞானத்திலே உறுதியாயிருந்தான். தேவசித்தத்திற்குள் இருந்தான்.

## 4. வேதத்தை வாசிக்கிறவன் :

இவனிடத்தில் காணப்பட்ட மற்றொரு சிறப்பான அம்சம் வேதவாசிப்பு. இன்றையக் கிறிஸ்தவன் வெகு எளிதில் மறந்துவிடுவது வேதப் புத்தகத்தையே. அன்றாடக வாழ்க்கை நெருக்கத்தில் மனிதனுடைய ஞாபக சக்தியிலிருந்து தவறிவிடுவது வேதப் புத்தகமே. வேதத்தை மறக்கிறவனை வீண் சிந்தனைகள் பற்றிக் கொள்ளும். இவனோ நீண்ட தூரப் பிரயாணக் களைப்பிலும், ஊருக்குத் திரும்பிப் போகும்போது "தன் ரதத்திலே உட்கார்ந்து ஏசாயா தீர்க்கதரிசன ஆகமத்தை வாசித்துக் கொண்டிருந்தான்." (அப் 8:28) ஆலயம் சென்று திரும்பியும் அவன் ஆத்துமாவில் சமாதானமில்லை. அந்தச் சமாதானத்தைப் பெற்றுக்கொள்ள வேதத்தில் அடைக்கலம் புகுந்தான். வாழ்க்கைப் பிரச்சனைக்குப் பதிலை உற்றார் உறவினரிடத்தில் தேடாதே, சமுகத்திலும் தேடாதே. வேத

வசனத்தில் உன் பதிலைத் தேடு. "இரவும் பகலும் வேதத்தில் தியானமாயிருக்கிற மனுஷன் பாக்கியவான்... அவன் செய்வதெல்லாம் வாய்க்கும்" (சங் 1:2,3) என்று வேதம் சொல்லுகிறதே. நெருக்கத்தினால் வேதத்தை வாசிக்கத் தவறாதீர்கள்; நெருக்கத்தில் வேதத்தை வாசியுங்கள், நெருக்கங்கள் விலகும், விசாலங்கள் உண்டாகும்.

ஏன் அவன் ஏசாயா ஆகமத்தை வாசித்தான்? இந்த ஆகமத்தை அவன் வாஞ்சித்து தனக்கென்று வாங்கியிருக்க வேண்டும். பொதுவாக இன்றையக் கிறிஸ்தவர்கள் அதிகமாய் விரும்பி வாசிப்பது சங்கீதப் புத்தகமே. அதிகமான உபதேசங்களோ, வேதத்தின் ஆழமான சத்தியங்களோ இல்லாதப் புத்தகம் சங்கீதப் புத்தகம். ஆனால் மன ஆறுதலுக்கான வார்த்தைகள் சங்கீதப் புத்தகத்தில் ஏராளம். ரோமர் நிருபமா? சங்கீதப் புத்தகமா? என்றால் மனம் சங்கீதப் புத்தகத்தை நோக்கியே ஓடும். இவனோ ஆழமான சத்தியம் நிறைந்த ஏசாயா புத்தகத்தையே வாங்கி வாசித்தான்.

இவனுடையப் பின்னணியைச் சற்று கவனிப்போம். உயர்ந்தப் பதவி, சமூக அந்தஸ்து இவை நிறைந்த மனிதன் இந்த மந்திரி. அவனை எவ்வளவுப் பாராட்டி சீராட்டி மக்கள் பேசினாலும், அவன் அண்ணகனாய் இருந்தபடியால் அவனைக்குறித்து மறைமுகமாக ஒன்று சொல்வார்கள் அது என்ன? அவன் ஒரு 'பட்ட மரம்' என்பதே! அவன் ஆண்மையற்றவனாயிருந்தபடியால் அவனைப் பட்டமரம் என்றே அழைத்தனர்

இது அவன் இதயத்துக்கு துக்கமாய், பாரமாய் இருந்தது. இப்படித் தன்னைப் பட்டமரம் என்று சொல்லுகிறார்களே என்று மனம் உடைந்திருப்பான். அவன் வாழ்க்கைப் பிரச்சனைக்கு ஏசாயா ஆகமத்தில் பதிலுண்டு என்று யாரோ அவனுக்கு சொல்லியிருப்பார்கள். ஆகவே அவன் இந்த ஆகமத்தை வாங்கியிருப்பான்.

சகோதரனே! சகோதரியே! உன் எல்லாப் பிரச்சனைக்கும் வேதத்தில் பதில் உண்டு என்று உனக்குத் தெரியுமா? தெரிந்தால் நீ அதை வாசிக்காமல் இருப்பாயா? வரலாற்றில்

உள்ள ஒரு சம்பவத்தைக் குறிப்பிட விரும்புகிறேன். அமெரிக்க ஜனாதிபதி ஜார்ஜ் வாஷிங்டன், தன் சரீரத்தில் ஏற்பட்ட காயத்திலிருந்து ஏராளமான இரத்தம் வெளியேறியதால் அவர் படுக்கையில் மரித்துக்கிடந்தார். அவர் அருகே வேதப் புத்தகம் திறந்து கிடந்தது. அந்த வேதப் புத்தகத்தில் ஓர் அருமையான வேத வசனம்! "மாம்சத்தின் உயிர் அதன் இரத்தத்தில் இருக்கிறது." அதனை மாத்திரம் அவரைச் சுற்றிலும் இருக்கிறவர்கள் வாசித்திருப்பார்களானால் ஜார்ஜ் வாஷிங்டனுக்கு இரத்தம் வருகிறதைத் தடுத்திருப்பார்கள். வேத வசனத்தை அவர்களுடைய வாழ்க்கைக்கு பயன்படுத்துவதில் தவறிப்போனார்கள்.

'பட்டமரம்' என்ற பிரச்சனைக்கு, வேதத்தில் அவன் பதிலைத் தேடினான். "அண்ணகனும் இதோ, நான் பட்டமரம் என்று சொல்லானாக. அண்ணகர்களை குறித்து கர்த்தர் சொல்லுகிறது என்னவென்றால்; நான் அவர்களுக்கு என் ஆலயத்திலும், என் மதில்களுக்குள்ளும் குமாரருக்கும் குமாரத்திகளுக்குமுரிய இடத்தையும் கீர்த்தியையும் பார்க்கிலும், உத்தம இடத்தையும் கீர்த்தியையும் கொடுப்பேன் என்றும் அழியாத நித்திய நாமத்தை அவர்களுக்கு அருளுவேன்" (ஏசாயா 56:3,6) என்றும் வேதம் சொல்லுகிறது. எத்தியோப்பிய மந்திரியினுடையப் பிரச்சனைக்கு இங்கு பதில் இருக்கிறது.

ஆலயத்தில் புறம்பாக்கப்பட்ட அன்னியனாகிய அண்ணகனான அவன், வேதப் பிரமாணங்களின்படி நடப்பானானால், பிள்ளைகளைப் பெற்றெடுக்கும் சிலாக்கியங்களை உடையவர்களைவிட உத்தம இடத்தையும், கீர்த்தியையும் தருவேன் என்று கர்த்தர் வாக்குப் பண்ணியிருந்தார். சரீரப் பிரகாரமாய் அவன் பட்டமரமாயிருந்தாலும், ஆவிக்குரிய பிரகாரம் பூத்துக் குலுங்கும் மரமாய் இருக்கிறான். ஆனால் இந்த வாக்குத்தத்தத்தையல்ல அவன் வாசித்துக் கொண்டிருந்தது. ஏசாயா 53ம் அதிகாரம் ஏழு, எட்டாம் வசனங்களை அவன் வாசித்துக் கொணடிருந்தான். அவனுடையப் பிரச்சனைக்கு எந்த நேரடியான தொடர்பில்லாத வேதப் பகுதியை அவன் வாசித்துக் கொண்டிருந்தான். இன்னும்

கொஞ்ச நேரத்தில் அவன் 56ம் அதிகாரத்தை வாசித்து தன் வாழ்க்கைப் பிரச்சனைக்கு பதிலைப் பெற்றிருப்பான்.

சகோதரனே! உன்னுடைய அனுதின வேதவாசிப்பில், உன் வாழ்க்கைப் பிரச்சனைக்கு சம்பந்தமில்லாத வேதப் பகுதியை வாசிக்க நேரிடும். சோர்ந்துப் போகாமல் தொடர்ந்து வேதத்தை வாசியுங்கள். உங்கள் வாழ்க்கைப் பிரச்சனைக்கு சரியானப் பதிலைக் கர்த்தர் தருவார். வாசித்த வசனங்கள் வீண் போவதில்லை. நீங்கள் வசனங்களை மறந்திருந்தாலும், அவைகள் உள் மனதில் சேகரிக்கப்பட்டிருக்கின்றன. சரியான நேரத்தில் கடவுள் உள் மனதில் இருந்து, வெளி மனதிற்கு – ஞாபகத்திற்குக் கொண்டு வருவார்.

## 5. ஆவியானவரின் சத்தம் :

"ஆவியானவர்; நீ போய், அந்த இரதத்துடனே சேர்ந்துக் கொள் என்று பிலிப்புடனே சொன்னார்" ஆவியானவரின் சத்தத்தை பிலிப்பு தெளிவாய்க் கேட்டான். நாம் யாரோடு அதிகமாய்ப் பழகுகிறோமோ அவர்களுடைய சத்தத்தைத் தான் நாம் தெளிவாய்க் கேட்போம். பழக்கமில்லாதபடியினால் சிறு பையனாய் இருந்தபொழுது சாமுவேல் கர்த்தருடைய சத்தத்தை அறியாதிருந்தான். பிற்காலத்தில் சரியாயிருந்து தேவ சத்தத்தைக் கேட்டு இஸ்ரவேலை எச்சரித்தான் சாமுவேல். தேவ மனிதனுடைய காதுகள் கூர்மையானவை. கையளவு மேகத்தில் பெருமழையின் சத்தத்தைக் கேட்கும். இஸ்ரவேலின் ராஜாவாகிய சவுல் தேவக் கட்டளைக்கு மாறாக பிடித்து வைத்த ஆடு மாடுகளின் சத்தம் கேட்டுக் கொண்டே இருந்தது. எல்லாரும் ஆடு மாடுகளின் சத்தத்தை தான் கேட்டனர், சாமுவேலோ சவுலுடையக் கீழ்ப்படியாமையின் சத்தத்தைக் கேட்டான்.

## 6. தேவ மனிதனின் கீழ்ப்படிதல் :

"பிலிப்பு ஒடிப்போய் அந்த இரதத்தோடு சேர்ந்தான்." (அப் 8:30) ஆவியானவருடைய சத்தத்தைக் கேட்டு பிலிப்பு உடனே கீழ்ப்படிந்தான். கர்த்தர் என்னோடு இப்படிப் பேசினார், அப்படிப் பேசினார் என்று சொல்வோருண்டு. ஆனால் கர்த்தர்

பேசிய வார்த்தைகளுக்கு அவர்கள் கீழ்ப்படிந்தார்களா? தங்கள் சபை இரட்சிக்கப்படாத ஒரு கூட்டமென்றும், அதன் ஊழியக்காரர் தேவனால் ஸ்தாபிக்கப்பட்டவர் அல்ல என்று அறிந்திருந்தும் தொடர்ந்து அந்தப் பெயர் சபையிலே நீடித்துக் கொண்டிருக்கிறார்களே அவர்கள் கிறிஸ்தவர்களா? ஊழியத்தை தாங்கு என்று ஆவியானவர் உனக்குச் சொல்லும்பொழுது அது உனக்கு வானாந்திரத்து சத்தமாய் இருக்கிறதென்ன? மாறுபாடும் கோணலுமுள்ள சந்ததியை விட்டு விலகு என்று ஆவியானவர் சொன்னதைக் கேட்டும், இன்னும் கீழ்ப்படியாமல் இருக்கிற உனக்கு, எந்தப் பிரசங்கி வந்து சத்தியத்தைச் சொல்ல முடியும்? பிலேயாமிடம் பேசியதுதான் இனி உன்னிடத்தில் பேச வேண்டும். கழுதையின் சத்தத்திற்குக் கூட அந்தத் தீர்க்கதரிசி கீழ்ப்படிந்தானே.

## 7. தேவ மனிதனின் தைரியம் :

நீர் வாசிக்கிறவைகளின் கருத்து உமக்குத் தெரியுமா என்று பிலிப்பு மந்திரியைக் கேட்டான். (அப். 8:30) இரதத்தில் அமர்ந்திருப்பவன் ஓர் மந்திரி. அவனிடம் அவன் வாசிப்பது அவனுக்குப் புரிகிறதா என்று கேட்பதற்கு தைரியம் வேண்டும். பிலிப்புவிற்கு ஆவியானவர் இந்தத் தைரியத்தைக் கொடுத்திருந்தார். பரிசுத்த ஆவியின் அபிஷேகத்திற்கு அந்நிய பாஷை மட்டும் அடையாளமல்ல, தைரியமும் ஓர் அடையாளம். இன்று பலருக்கு பொது ஆராதனையில் ஜெபம் பண்ண பயம்; சாட்சி சொல்ல பயம், பேசப் பயம். ஏனெனில் அவர்கள் அபிஷேகம் பெற்றிந்தாலும், பரிசுத்த ஆவியானவரின் ஆளுகையில் இல்லை. ஆனால் தேவ மனிதனாகிய பிலிப்பு, ஆவியானவரின் ஆளுகையில் இருந்தான். ஆகவே தைரியமாய் அவன் மந்திரியிடம் பேசினான். இன்று பேச வேண்டியவர்களின் வாய்கள் மூடிக்கிடப்பதால், தேசத்தில் சாத்தான் சிங்கத்தைப்போல கர்ஜிக்கிறான். ஆவியில் நிறைந்தவர்கள் வாய் திறந்தால், இந்த வீண் கர்ஜனைகள் அடங்கிவிடும். பேதுரு தைரியமாய்ப் பேசினபடியால், பெந்தகொஸ்தே நாளில் பிரமித்து நின்றவர்களில் மூவாயிரம் பேர் சத்தியத்திற்குக் கீழ்ப்படிந்தனர்.

சகோதரனே! சகோதரியே! இந்த வாரம் யாருடன் சத்தியத்தைப் பகிர்ந்துக் கொண்டீர்கள்? நமக்கென்ன என்று மௌனமாய் இருந்துவிட்டீர்களா? மௌனமாயிருக்க இது காலம் இல்லையே. மதவெறியாளர்களின் செயலின் கொடுமைக்கு இரையான மக்களுக்காக நாம் அறைக்கதவை அடைத்து ஜெபம்பண்ண வேண்டும். ஆனால் அது மட்டும் போதாது. அநியாயத்தை, அக்கிரமத்தை எதிர்த்து சத்தியத்தைத் தைரியமாய் நாம் பேச வேண்டும்.

சங்கிலிகளால் கட்டப்பட்ட பவுல் தன் விடுதலைக்காக ஜெபம்பண்ண நம்மை அழைக்கவில்லை; சுவிசேஷத்திற்காகச் சங்கிலியால் கட்டப்பட்டிருக்கிற ஸ்தானாதிபதியாகிய நான் அதைப்பற்றிப் பேச வேண்டியபடி தைரியமாய்ப் பேசத்தக்கதாக வாக்கு எனக்குக் கொடுக்கும்படி எனக்காக விண்ணப்பம் பண்ணுங்கள்" (எபே 6:19,20) என்றுதான் பவுல் நம்மிடம் கூறுகிறார்.

ஆகவே தைரியமாய் ஆவியில் நிறைந்து பேசுங்கள், எதிர்வாதங்கள், மதவாதங்கள் அடங்கி ஒடுங்கிப்போம். மௌனமாயிராதீர்கள்! கிறிஸ்துவுக்குள் தைரியமாயிருங்கள். நீங்கள் பேசுங்கள்; கர்த்தர் கிரியை செய்வார்.

## 8. மனிதனின் அறியாமை :

"நீர் வாசிக்கிறவைகளின் கருத்து உமக்குத் தெரியுமா என்றான். அதற்கு அவன்; ஒருவன் எனக்குத் தெரிவிக்காவிட்டால் எனக்கு எப்படித் தெரியும் என்றான்." (அப் 8:30,31) தான் வாசிக்கும், வேதப்பகுதி என்ன சொல்கிறது என்று அறியாமலேயே அவன் வேதத்தை வாசித்தான். ஆலயம் சென்றான், ஆண்டவனைக் காணவில்லை; வேதத்தை வாசித்தான் சத்தியத்தை அறியவில்லை. இப்படி அறியாமையில், அவன் வாழ்ந்துக் கொண்டிருந்தான். ஆனாலும் "ஒருவன்" இதனைத் தனக்கு விளக்கிச் சொல்ல வேண்டுமே என்று அவன் ஆத்துமா ஏங்கியது. இந்த ஏக்கத்தைப் போக்கவே, கர்த்தர் பிலிப்புவை அவனிடம் அனுப்பியிருந்தார்.

மனிதன் ஆவிக்குரிய அறியாமையில் இருப்பது ஆச்சரியமல்ல. ஆனால் இந்த அறியாமையைவிட்டு வெளியே வரவேண்டும் என்று அவன் மனதார வாஞ்சிக்க வேண்டும். அறியாமை ஒரு பாதுகாப்பல்ல. Ignorance is not a good defence. பலர் சத்தியங்கள் தங்களுக்கு தெரியாது என்பதிலேயே சமாதானம் அடைகின்றனர். இயேசுவா? இரட்சிப்பா? இதெல்லாம் தங்களுக்கு ஒன்றும் தெரியாது என்று மனித அறியாமைக் காலத்தை கர்த்தர் கொஞ்ச நாள் தான் பொறுத்துக் கொள்வார். "அறியாமையுள்ள காலங்களை தேவன் காணாதவர் போலிருந்தார். இப்பொழுதோ மனந்திரும்பவேண்டுமென்று எங்குமுள்ள மனுஷர் எல்லாருக்கும் கட்டளையிடுகிறார்." (அப். 17:30) இந்த மந்திரி தன் அறியாமையை விட்டு வெளியே வரும்படி விரும்புகிறார்.

நீங்கள் எப்படி இருக்கிறீர்கள்? அறியாத சத்தியத்தைக் குறித்து அலட்சியமாயிருக்கிறீர்களா? அது உங்களுக்கு பேராபத்தைக் கொண்டுவரும் என்று நீங்கள் அறியீர்களா?


## 9. பிலிப்புவின் நற்செய்தி :

மந்திரி வாசித்தப் பகுதியிலிருந்து பிலிப்பு நற்செய்தியை அவனுக்குப் பிரசங்கித்தான். ஏசாயா தீர்க்கதரிசன வாக்கியங்களில் மறைந்திருந்த இரட்சகரை பிலிப்பு வெளிப்படுத்தினார். தேவனை அறியாத ஒரு மனிதனுக்கு வெளிப்படுத்த வேண்டிய முதல் சத்தியம் இரட்சகராகிய இயேசுவே. பிலிப்புவும் இயேசு கிறிஸ்துவைக் குறித்துப் பிரசங்கித்தான்.

வழிப்பிரயாணத்தில் களைத்துப் போன மக்களுக்கு, இரண்டு மீனும் ஐந்து அப்பமும் கொண்டு போதுமான ஆகாரம் கொடுத்த அற்புதத்தைக் குறித்தே அவன் பேசினான். எத்தியோப்பியாவில் அவன் செல்வாக்கு உயர்வதற்கான வழிகளை அவன் பேசவில்லை. ஆண்மையற்ற அவன் வீரப் புருஷனாவான் என்று வீரப் பிரசங்கம் பண்ணவில்லை. "உன் பிள்ளைகளுடைய சமாதானம் பெரிதாயிருக்கும்" என்று வாக்குத்தத்தங்களை அள்ளி வீசவில்லை. சிலுவையில் இயேசு

சிந்திய இரத்தத்தைக் குறித்தே அவன் பிரசங்கித்தான். சிலுவையில் இயேசு சிந்திய இரத்தம் அவன் பாவங்களைக் கழுவி சுத்தமாக்கும் என்றே அவன் பிரசங்கித்தான். செய்தப் பாவம் தொலைய ஓரே வழி இயேசுவின் ரத்தம். இனி பாவம் செய்யாமலிருக்க ஓரே வழி இயேசுவின் ஜீவன். ஞானஸ்நானத்தில் இந்த ஜீவன் ஒவ்வொரு மனிதனுக்கும் கிடைக்கிறது என்பதையும் அவன் பிரசங்கித்தான். இயேசுவின் மரணத்தினாலும் ஜீவனாலும் உண்டான பூரண இரட்சிப்பை பிலிப்புப் பிரசங்கித்தான்.

இன்றைய பிரசங்கிமார் ஒரு மந்திரியைச் சந்தித்தால் தங்களுடைய ஜெபக்கோபுர திட்டத்தை உடனே சமர்ப்பித்திருப்பார்கள். எத்தியோப்பியாவில் ஒரு பெத்தேல் பொறியியல் கல்லூரியைக் கட்டி பொருளாதாரத்தை வளப்படுத்த வழி சொல்லிக் கொடுத்திருப்பார்கள். ஆனால் தேவ மனிதனான பிலிப்புவோ அவனுக்கு ஞானஸ்நானம் கொடுத்து, வழிப்போக்கனான அவனை நித்திய ராஜ்யத்தின் யாத்திரீகனாக மாற்றினான், பாலைவனத்தில் இரட்சண்ய மலர் பூத்தது.



# ஆத்துமாவில் முள், ஆவியில் மலர்

எத்தனையோ சம்பவங்கள் நம் மனதில் (ஆத்துமாவில்) முட்களாகக் குத்திக்கிழித்து, நம் எண்ணங்களை வேதனையின் வடிகால்களாக மாற்றுகின்றன. ஆனால் ஆவியிலோ, நம்பிக்கை மலர்கள் பூக்கின்றன. ஆத்துமாக்களைக் கிழிக்கும் முட்களை அல்ல, நமது ஆவியை மகிழச்செய்யும் மலர்களையே நோக்க வேண்டும்.

எவை இந்த மலர்கள்? நெருக்கங்களில், நமக்கு நம்பிக்கைத் தரும் வேத வசனம், அரவணைக்கும் தேவ சமூகம் - இவைகளே அந்த மலர்கள், சிலுவைப்பாடுகள் நமது கர்த்தரின் ஆத்துமாவில் கொடிய முட்கள், நமதாண்டவர் அந்த ஆத்தும முட்களை எப்படி சகித்தார் என்பது நமக்கு வழிகாட்டியாகும்.

"அவர் தமக்குமுன் வைத்திருந்த சந்தோஷத்தின் பொருட்டு, அவமானத்தை எண்ணாமல், சிலுவையைச் சகித்து தேவனுடைய சிங்காசனத்தில் வீற்றிருக்கிறார்." (எபி 12:2)

சிலுவையில் அவர் அனுபவித்த அவமானம் ஏளனம், அடிகள், வேதனைகள் - இவைகளெல்லாம் அவருடைய மனதைக் கலங்கப்பண்ணும் முட்கள். இந்த முட்களை ஆத்துமாவில் அவர் சுமக்கும்பொழுது, இந்தப்பாடுகளுக்குப் பிறகு, தான் அடையப்போகும் சந்தோஷத்தின் மேலுள்ள நம்பிக்கை அவர் ஆவியில் மலர்ந்தது. ஆகவே இந்த முட்களை அவர் சகித்தார். பரம நம்பிக்கை, இவ்வுலகப்பாடுகளைச் சகிக்க உதவிசெய்தது. இந்த நம்பிக்கை மலரை அவர் ஆவி கண்டு மகிழ்ந்தது. ஆகையால் இந்த முட்களை, வேதனைகளை, பரியாச வார்த்தைகளை அவர் சகித்தார்.

## முட்களை எப்படி சகிப்பது?

அவமானத்தை எண்ணாமற்போவதே, முட்களைச் சகிக்கும் வழி. பிரச்சனைகளை அற்பமாக, ஒன்றுமில்லாததாக கருதுவது அவைகளை எண்ணாமற்போவதாகாது. அவைகளை முற்றிலும் மறந்துவிடுவதும் அவைகளை எண்ணாமற் போவதாகாது.

## அப்படியாயின் அவைகளை எண்ணாமற்போகும் வழி எது?

ஒரு மனிதனிடம், அவனுடைய நண்பன் ஒரு குரங்கின் படத்தைக் காட்டிவிட்டு, கொஞ்சநேரம் கழித்து, நீ எந்த மிருகத்தைப் பார்த்தாய் என்று கேட்டபொழுது அவன் “குரங்கை” என்று பதில் சொன்னான். “சரி, அந்தக் குரங்கை மறந்துவிடு”... இப்பொழுது உன் மனதில் எந்த மிருகம் தோன்றுகிறது என்று கேட்டான். “இப்பொழுதும் அந்தக் குரங்கைத்தான் என் மனம் காண்கிறது” என்று அந்த மனிதன் பதிலுரைத்தான். உடனே அந்த மனிதன் ஒரு யானைப்படத்தைக் காட்டிவிட்டு, “இப்பொழுது உன் மனம் எந்த மிருகத்தைக் காண்கிறது” என்று கேட்டபொழுது, அவன் சொன்ன பதில் “யானை”. ஆம்! நம் மனமானது காரியங்களை, சம்பவங்களை, வேதனைகளை எளிதில் மறந்துவிடாது. இவைகளை எண்ணாமற்போக, குரங்கை மறக்க யானை தேவைப்பட்டது போல் புதிய சிந்தனைகள் வேண்டும்.

உதாரணமாக, ஆபிரகாம் தகப்பனாவதற்கு சாத்தியக்கூறே இல்லாத வேளையில் தன் சரீரம் செத்துப்போனதை எண்ணாதிருந்தான். எப்படி? தன் பலவீனத்தை அல்ல, தேவனது வாக்குத்தத்தமாகிய பலத்தையே நினைவு கூர்ந்ததினாலே. ஆம்! ஆத்துமாவைக் கிழித்த வெறுமையான இல்லத்தை அல்ல, அவன் இதயத்தை நிரப்பிய வாக்குத்தத்தத்தையே அவன் நினைவு கூர்ந்தான்! முள்ளை மறந்து, மலரை நினைவு கூர்ந்தான். நம் வேதனைகளாகிய முட்கள் தேவதிட்டம் என்ற தோட்டத்திற்கு வெளியே இருக்க வேண்டியவை என்று எண்ணாமல், முட்கள் நிறைந்த இந்தத் தோட்டத்திலும் அவரின் சித்தப்படி உன் எதிர்காலம் மலரும் என்று விசுவாசி, வேதம் உங்களோடு பேசும் வார்த்தைகளைக் கவனியுங்கள்.

## மலரைக் காணும் வழி :

“வாழ்வுக்காலத்தில் நன்மையை அனுபவித்திரு; தாழ்வுகாலத்தில் சிந்தனை செய்... இவ்விரண்டையும் ஒன்றுக்கொன்று எதிரிடையாக வைத்திருக்கிறார்.”(பிரசங்கி 7:14)

வாழ்வும், தாழ்வும் எதிரிடையானக் காரியங்கள். ஆனால் இவ்விரண்டு காலங்களும் தேவனது கரத்தில்தான் இருக்கின்றன! உன் வாழ்வின் காலம் தேவனுடைய கரத்திலென்றும், உன் தாழ்வின் காலம் சாத்தானின் கரத்திலென்றும் எண்ணாதே. வாழ்வோ, தாழ்வோ... உன் இரண்டு காலங்களும் கர்த்தர் இயேசுவின் கரத்திலிருக்கின்றன. ஆகவே “வாழ்வின் காலத்தில் மகிழ்ந்திரு; தாழ்வின் காலத்தில் துக்கித்திரு” என்று கர்த்தர் சொல்லவில்லை. “வாழ்வின் காலத்தில் மகிழ்ந்திரு; தாழ்வின் காலத்தில் சிந்தனை செய்!” கவலை, பயம், திகில் - இவைகள் உன் ஆத்துமாவை ஆள சம்மதித்துவிடாதே! சம்பவங்கள் நேரெதிரிடையாக நடக்கும்பொழுது, அவைகளெல்லாம் முள்ளாகத் தைக்கும்பொழுது, கவலையில், சோகத்தில் மூழ்கிவிடாதே! இவைகள் ஏன் சம்பவிக்கின்றன என்று சிந்தனை செய். அந்தச் சிந்தனையில் தேவ நோக்கம் என்ற மலரைக் காண்பாய்! அந்த மலரைக் காணுமட்டும், உன் முட்களைத் தாங்கிக்கொள்ள தேவன் கிருபையைக் கட்டளையிடுவார்.

## ஆத்துமாவை உருவிப்போகும் பட்டயம் :

இயேசுவின் அன்புத் தாயாருக்கு ஆவியானவர் அனுப்பிய வார்த்தைகள், “உன் ஆத்துமாவையும் ஒரு பட்டயம் உருவிப்போகும்.” (லூக் 2:35) நமது ஆண்டவர் மரியாளின் வயிற்றில் உருவான நாள் முதல் மரியாளின் ஆத்துமாவில் எத்தனையோ முட்கள்! தன் மகனைப் பற்றிய திகில், அந்த ஏழைத்தாயின் இதயத்தை முள்ளாகக் கிழித்து, நாளடைவில் ஒரு பட்டயமே உருவாகி, அந்தத் தாயின் ஆத்துமாவை, மனதை உருவிப்போனது! குடுகுடுப்பைக்காரன் போல் ஒரு பட்டயம் உன் மனதை உருவப்போகிறது என்று ஆண்டவர் சொல்லவில்லை. அந்தப் பட்டயத்தைத் தாங்கிக் கொள்ளும் தேவ பலத்தையும் கர்த்தரின் தாயாருக்கு வாக்களித்தார்.

இந்தப் பட்டயத்தின் வேதனையில், மனச்சோர்வின் படுபாதாளத்தில் விழுந்து விடாமல், இந்தத் தாயாருக்கு ஆண்டவர் கொடுத்த பலம் "கிருபை". ஆம்! கிருபை பெற்றவளே, வாழ்க! என்பதன் பொருள் இதுதான்! தேவன் வீணாக கிருபைகளைத் தருவதில்லை. ஆத்துமாவில் தைக்கும் முட்களையோ, உருவிப்போகும் பட்டயத்தையோ தாங்கிக் கொள்ளும் பலத்தை அளிக்கவே கிருபை கிரியை செய்கிறது. தன் மகனுக்கு எதிராக உருவாகும் சூழ்நிலைகள், சதிகள், நிந்தைகள், கடைசியில் அவர் சிலுவையில் துடித்த வேதனையான காட்சிகள் - இவைகள்தான் ஆத்துமாவில் தைத்த முட்களும், உருவிப்போன பட்டயமும். "கிருபையினாலேயே நீ வாழப்போகிறாய்" என்று மரியாளை வாழ்த்தியதின் பொருள், "முட்களின் மத்தியில் மலர்ந்திரு" என்பதே.

## ஆவியில் மலரும் வண்ணமலரை மறந்துவிடாதே.

யோசேப்பு அணிந்திருந்த அங்கியைக் காட்டி, உன் மகன் பீறுண்டுப் போனான் என்று சாத்தான் யாக்போபை முட்பாதையில் இழுக்க ஆரம்பித்தான். (ஆதி 37:33) மகனின் திடீர் மறைவு என்ற முள் ஆத்துமாவைக் கிழித்தது. கண்கள் கண்ணீர் நதியாக மாறின. "கடைசி நாளில் விழிக்கதவுகளை மூடும்வரை, என் ஆத்துமா ஆறுதலடையாது. துக்கத்தின் மகனாகவே நான் மரிப்பேன்" என்று யாக்கோபு கலங்கினான். அவன் ஆவியில் ஏற்கெனவே ஒரு சின்னமலர், தன் இதழ்களை விரித்திருந்தது. ஆம்! ஒரு நாள் யோசேப்பு தன் கனவுகளைத் தன் சகோதரரிடம் சொன்னான். தன்னை அவர்கள் வணங்குவது போல் ஒரு காட்சியைக் கண்டான். இதனைக் கேட்ட யாக்கோபு, தன் மகன்களுக்கு மத்தியில் யோசேப்பைக் கடிந்துக் கொண்டாலும் அந்தச் சொப்பனத்தைத் தன் மனதில் வைத்துக் கொண்டான். (ஆதி 37:11)

தன் மகன் யோசேப்பு மற்றெல்லா மகன்களைவிட உயர்த்தப்படப்போகிறான் என்ற செய்தி, சிறு மொட்டாக அரும்ப ஆரம்பித்தது அவன் மனதில். அந்த அரும்பு, அவன் ஆவியில் நம்பிக்கை மலராகத் தோன்ற ஆரம்பிக்குமுன், சூழ்நிலை காட்டிய முள்ளில் அவன் ஆத்துமா சிக்கிக்கொண்டது.

இரத்தக்கறைகள் அவன் இதயத்தைக் கலங்கப்பண்ணின. எங்கோ ஒரு அடர்ந்த காட்டில் யோசேப்பு கொடிய மிருகத்திற்கு இரையாகிவிட்டான் என்று நம்பினான். ஆவியில் மலர்ந்திருந்த வாக்குத்தத்தத்தை, சொப்பனத்தை நினைத்திருப்பானெனில், இந்த முள்ளுக்கு அவன் ஆத்துமா தப்பியிருக்கும்; இந்தக் கண்ணீரின் பாதை அவனுக்கு வெகு தூரமாயிருந்திருக்கும்! ஆவியில் பெற்ற தேவசெய்தியான வண்ண மலரை மறந்தான்; முள் அவன் ஆத்துமாவைக் கிழிக்க ஆரம்பித்தது. மருத்துவமனை உன் இரத்தத்தைக் குறித்து சொன்ன செய்தி, உன் ஆத்துமாவைக் கிழிக்கிறதா? உன் தேவன் என்ன சொல்கிறார் என்பதைக் கவனி.

வேதம் ஒரு சம்பவத்தைப் படம் பிடித்துக் காட்டுகிறது. பசியினால் வாடும் நூறு வேதாகமக் கல்லூரி மாணவர்களுக்கு திடீரென்று, தேவ தயவால் 20 அப்பங்கள் கிடைக்கின்றன. தேவ மனிதன் எலிசா தன் பணிவிடைக்காரனை நோக்கி, "இந்த அப்பங்களை இவர்களுக்குக் கொடு" என்கிறார். "ஐயா! 20 அப்பங்கள் எப்படி 100 பேருக்குப் போதும்" என்று திகைக்கிறான் பணிவிடைக்காரன். எலிசாவின் ஆவியில் ஒரு செய்தி கேட்கிறது. அதனைக் கேட்ட எலிசா "நீ கொடுக்கத் தொடங்கு, மீதி உண்டாகும்" என்றான். அப்படியே ஆவியின் செய்தியின்படி எல்லோருடைய தேவைகளையும் சந்தித்தபின் மீதியும் இருந்தது!

உன் ஆவி பெற்ற செய்தி – மொட்டு; அதை விசுவாசித்தால் வெற்றி என்ற மலர். இதனைத் தவறவிட்டால் உன் ஆத்துமா முள்ளையே அனுபவிக்கும். வாழ்க்கையின் அஸ்திபாரம். வாழ்க்கையில் நாம் காண்பவையல்ல, சத்திய வேதத்தில் நாம் காணும் வார்த்தைகளே.

## வேதம் வாழ்வின் எல்லாப் பிரச்சனைகளுக்கும் பதிலளிக்கிறதா?

இல்லை! வேதம் எல்லா வினாக்களுக்கும், பிரச்சனைகளுக்கும் பதிலளிப்பதில்லை. ஆனால் வேதத்தை எழுதிய தேவன் எல்லாப் பிரச்சனைகளுக்கும் பதிலளிக்கிறார்.

ஆகவே வேதம் மௌனமாக இருக்கும் வேளையில் தேவனின் சுபாவத்தில் நம்பிக்கை வைக்கிறோம்.

வேதமில்லா காலத்தில் யோபுவின் தரிசனம் மகா மேன்மையானது. சரீரமெல்லாம் புழுக்கள், பொறுக்கமுடியா வேதனை, நெருக்கம் - இவையெல்லாம் ஆத்துமாவைக் கிழிக்கும் கூரிய முட்கள். இந்த நிலையிலும் யோபுவின் ஆவியில் உயிர்த்தெழப்போகும் நம்பிக்கை மலர்ந்தது. ஆகவே முள்ளின் வேதனைகளை அவன் மறந்துவிட்டான்.

## அப்பத்திற்காகத் தானியம் இடிக்கப்படவேண்டும் :

முட்களுக்குள் மலர்ந்திருக்கும் நம் வாழ்க்கை, கண்ணீர்ப் பாதையைக் கடக்கும் மற்ற தேவப்பிள்ளைக்கு களைத்த நேரங்களில் அப்பமாகும்! நம் வாழ்க்கை மற்றவர்களை ஆற்றித்தேற்றும். வறுமை, வேதனை, நோய், அவமானம் என்று இப்படி முட்களால் சூழ்ந்திருப்போருக்கு, ஆத்துமப் பசி போக்கும் ஜீவ அப்பமாக மாறும்படி நீ உன் ஆத்துமாவை முட்கள் ஊடுருவிப் போகும்! சங்கடப் பாதையை நீ கடக்கும்பொழுது, சஞ்சலப் பள்ளத்தாக்கில் நீ நடக்கும்பொழுது, உன் வாழ்க்கை எனும் தானியம் இடிக்கப்படுகிறது... ஜீவ அப்பமாக அது உயிர்பெறுகிறது.

அலெக்ஸாண்டர் வொயிட் என்பவர் எடின்பர்க்கில் நல்ல பிரசங்கி, வேதத்தின் ஆழத்தில் சென்று முத்துக்களை எடுத்துவரும் அருமையான சிந்தனையாளர். ஆனால் அவருடைய பிறப்பு கண்ணியக் குறைவானது. ஆம்! அவருடைய தாய் நெறிபுரண்ட வாழ்க்கையில்! மற்றவர்கள் அவருடைய தாயை இழிவாகப் பேசும்பொழுது அவர் ஆத்துமாவை அவமான முட்கள் கிழிக்கும். அப்பொழுதெல்லாம், தன் அழைப்பின் மலரை நோக்கிப் பார்த்து ஆறுதல் அடைவார். அவருடைய இடுக்கமான நேரங்களில் தேவனோடு நெருக்கமான உறவுகள் மலர்ந்தன.

அவர் பிரசங்கம் பண்ணிவிட்டு – தேவனது ஜீவ வார்த்தைகளை மக்களுக்கு கொடுத்துவிட்டு மனநிறைவுடன் செல்லும்பொழுது அவர் காதில் விழும் வார்த்தைகள், “நம் பாஸ்டர் ஒழுக்கக்கேட்டில் பிறந்த ஒரு பிள்ளை. He is an

illegetimate child.” இந்த வார்த்தைகள் அவர் ஆத்துமாவில் முள்ளாய்க் குத்தும். அந்த அழுகைக்குப்பின், பிரசங்க மேடையினின்று புறப்படும் வார்த்தைகள் தேவ வல்லமையின் வார்த்தைகள்! பரிசுத்த ஆவியானவரின் அக்கினி அம்புகள். இப்படி அவர் பிரசங்க மேடை வெற்றி மலராக விளங்கியது; விடுதலை நறுமணம் பரவியது. இடிபட்ட அவரது உள்ளத்தில் உருவான கண்ணீரின் செய்தி, கேட்போருக்கு ஜீவ அப்பமாயிற்று. உன் வாழ்க்கையும் சோர்வுற்றோருக்கு ஜீவ அப்பமாக இருப்பதாக!.

## பரிசுத்தவான்களின் மனதை ஊடுருவும் முட்கள் :

### 1. வருத்தத்தின் முள் :

வருத்தம் அனுபவிக்கவே மனுஷன் பிறந்திருக்கிறான் என்பது சாதாரண வார்த்தைகள். மனரம்மியமாய் இருக்கிறேன் என்பது தேவ சமூகம் ஆளுகை செய்யும் இதயத்தின் வெளிப்பாடு. மரணம் தன் கொடுமையான ஆட்சியை நடத்திவிட்டு யோபுவின் வீட்டைக் கண்ணீர் தடாகமாக மாற்றியிருந்தது. இது ஏன் இப்படி என்று புரியாத பக்தன் யோபு, “கர்த்தர் என் அருகில் போகிறார், நான் அவரைக் காணேன்; அவர் கடந்துபோகிறார், நான் அவரை அறியேன். இதோ, அவர் பறித்துக் கொண்டு போகிறார்; அவரை மறிப்பவன் யார்? நீர் என்ன செய்கிறீர் என்று அவரைக் கேட்பவன் யார்? (யோபு 9:11,12) என்று புலம்புகிறான்.

தன்னுடைய துயரப்படுக்கை அருகே கர்த்தர் நிற்பதாக ஒரு உணர்வு, கண்விழித்துப் பார்த்தால் அவர் கண்ணெதிரே இல்லை. தன்னைத் தொட்டு கர்த்தர் போவதுபோல தெரிகிறது. ஆனால் கொஞ்ச நேரத்தில் அந்தத் தொடு உணர்ச்சியும் மறைந்துவிடுகிறது. இப்படி தேவப் பிள்ளை எண்ணி எண்ணி கலங்குகிறான். “என் சந்தோஷத்தையும், என் சமாதானத்தையும், என் ஆரோக்கியத்தையும் நீர் பறித்துக்கொண்டு போகிறீர். ஏன் என்று உம்மை மறிப்பது யார்? தடுப்பது யார்? உம்மைக் கேள்வி கேட்க யாரால் முடியும்?” என்ற வார்த்தைகள் கண்ணீரோடு கலந்து வருகின்றன.

என் அருமை சகோதரனே, சகோதரியே! விளங்கிக்கொள்ள முடியாத வேதனையில் சிக்கிக்கொண்டாயா? ஒவ்வொரு சூழ்நிலையும் உன் வாழ்வின் ஆசிர்வாதங்களைத் தட்டிப் பறிக்கிறதா? எல்லாம் அவர் சித்தம் என்று மனமகிழ்ச்சியோடு, மனநிறைவோடு இந்த முட்களை ஏற்றுக் கொள்வதற்குப் பதிலாக "ஐயோ! என் தலையெழுத்து" என்று அமர்ந்துவிட்டாயா? பாடுகளையும் பயங்கரங்களையும் கடந்துவந்த யோபு கடைசியாகச் சொன்ன வார்த்தைகள் யாவை? "என் காதினால் உம்மைக் குறித்துக் கேள்விப்பட்டேன்; இப்பொழுதோ என் கண் உம்மைக் காண்கிறது". (யோபு 42:5) முட்களையே கண்டுவந்த அவன் கண்கள், அவன் ஓடின பொறுமையின் பாதையினிமித்தம் இரட்சண்ய மலரான மீட்பரைக் கண்டன.

உன் வருத்தத்தின் பாதை முடிய வேண்டுமென்றால் விசுவாசத்தில் துரிதமாய் நட. இதயத்திற்குப் பாரமான எல்லாவற்றையும் தள்ளு. உன் சுபாவத்திற்கு சமீபமான பாவங்களை உதறு. இரட்சகரைப் பார்த்தவாறே வாழ்க்கையின் சூழல்களைத் தேவன் நியமித்த பாதையென்று எண்ணி ஓடு. இந்தப் பாதையில் இப்பொழுது பக்தன் சொல்லும் வார்த்தை, "நான் தேவனைக் கண்டேன்". நொண்டி நொண்டி நடந்த யாக்கோபு தன் வேதனையில் அறிவித்த வெற்றியின் வார்த்தைகள், "நான் தேவனை முகமுகமாய்க் கண்டேன்." இவைகளெல்லாம் முட்களுக்கு நடுவில் மலர்ந்த வெற்றியின் மலர்கள். இந்த மலர்களே உன்னைச் சுற்றிலும் நம்பிக்கை நறுமணத்தை பரப்புகின்றன.

## 2. சந்தேகத்தின் முள் :

ரோமானிய எதேச்சதிகாரம், அரசாங்கத்தின் அத்துமீறல்கள், மதவாதிகளின் தீவிரவாதம் இவைகளினால் எருசலேமில் கொடுமைகள் நிறைவேறிக் கொண்டேயிருந்தன. ஊருக்கு வெளியே சிலுவை மரத்தில் தொங்கும் பிணங்கள்! கிறிஸ்தவத்திற்கு எதிரான போர் முரசு கொட்டப்பட்டுவிட்டது. சீஷர்களும் பயந்து பதுங்கிவிட்டனர். இந்நிலையில் இயேசு, தாளிட்ட அறைக் கதவைத் திறவாமல் உள்ளே வந்து,

“உங்களுக்குச் சமாதானம்” என்றார். இச்செய்தியைக் கேள்விப்பட்ட தோமா சொல்கிறான், “நான் நம்பமாட்டேன்; அவர் காயத்தில் விரலைப் போட்டால்தான் நம்புவேன்”. ஆண்டவரின் சரீரத்தைக் கிழித்த ரோமாபுரி ஆணிகளைவிட, விலாப் புண்ணிலே தன் விரலை விடுவேன் என்று சொன்ன தோமாவின் வார்த்தைகளே இயேசுவுக்கு அதிக வேதனையைத் தந்தன. இந்தச் சந்தேக வார்த்தைகள் முட்களாகத் தைத்துக் கொண்டிருக்கும் வேளையில் “என் தேவனே! என் ஆண்டவனே” என்று தோமாவின் வாயினின்று புறப்பட்ட விசுவாச அறிக்கை என்ற மலர், கர்த்தரின் மேல் குளிர்த் தென்றலாய்த் தடவிச் சென்றது.

உன்னையும் வீணாகச் சந்தேகப்படுகிறார்களா? உன் அந்தரங்க வாழ்க்கையை அவதூறாய் விமர்சிக்கிறார்களா? உன் கொடுக்கல், வாங்கலை அநியாயம் என்று தீர்ப்பளிக்கிறார்களா? தேவன் என்னை அநியாயத்தின் தலைவாசலில் தலைகுனிய வைத்து விட்டார் என்று புலம்பாதே! “நான் கடந்துபோகக்கூடாதபடிக்கு, அவர் என் பாதையை வேலியடைத்து, என் வழிகளை இருளாக்கிவிட்டார்” (யோபு 19:8) என்று தேவன் மேல் குற்றம் சாட்டிய யோபு கூறுகிறார், “தேவரீர் சகலத்தையும் செய்ய வல்லவர்; நீர் செய்ய நினைத்தது தடைபடாது.” (யோபு 42:2)

ஆம்! உன் வாழ்வை இருளாக்குவது அவரது நினைவு அல்ல. உன் பாதையை கடந்து போகாதபடி வேலியடைப்பது அவர் வேலை அல்ல. வீணாக உன்னைச் சந்தேகப் படுகிறார்களா? இதய முட்களோடு அவரது பாதத்தில் அமர்ந்துவிடு! காலம் உன் கோலத்தை மாற்றும்படி அவர் உத்தரவிடுவார். ஆமென்!.

## 3. குற்ற உணர்வு என்ற முள் :

பாவத்தையே திரும்பத் திரும்ப நினைத்து, இந்த நினைவுகள் முட்களாக உன் ஆத்துமாவைக் கிழிக்கிறதா? “நான் அடக்கிவைத்த மட்டும், நித்தம் என் கதறுதலினாலே என் எலும்புகள் உலர்ந்து போயின. இரவும், பகலும் என்

மேல் உம்முடைய கை பாரமாயிருந்ததினால் என் சரீரம் உஷ்ணகால வறட்சிபோல் வறண்டு போயிற்று.'' (சங். 32:3,4) சங்கீதக்காரன் தன் பாவத்தை எண்ணும்பொழுதெல்லாம் அவைகள் முட்களாக அவன் ஆத்துமாவைக் கிழித்தன! ஆனால் பாவ அறிக்கைக்கு பிறகு அமைதி அடைந்தான். அதன் பிறகு அந்தப் பாவச் சரித்திரத்தை மீண்டும் ஒருமுறை வாசிக்கவேயில்லை. தேவன் மன்னித்தப் பாவத்தை மீண்டும் நினைக்காதே!.

இரட்சண்ய சந்தோஷ மலரில் நீ மகிழ்ந்திராவிட்டால், உன் மனசாட்சி முள்ளினால் கிழிக்கப்பட்டு ஆத்துமா வேதனைச் சங்கீதம் பாடும். அடிக்கடி உன் இதயத்தின் ஆழம் உன்னை நோக்கி "நீயே அந்த மனுஷன்'' என்று சொல்லும். வாழும் நாளில் மனைவியை அடிமை போல் நடத்தினவர்கள், அவளது உணர்வுகளை மதிக்காமல் ஜீவித்தவர்கள், மனைவியின் கல்லறை நோக்கி தனிமை நடை நடந்து, பூமாலை வைத்து வருவது உறங்கா மனசாட்சியை அமைதிப்படுத்தவே! எல்லோரும் இப்படி அல்ல. தேவனிடம் உன் பாவத்தை அறிவித்தபின் பாவமன்னிப்பு என்ற மலரைக் கண்டு மகிழ்ந்திரு. மீண்டும், மீண்டும் உன் பாவமுட்களை எண்ணி எண்ணிக் கலங்காதே!

தேவன் மன்னித்தப் பாவத்தை மீண்டும் எண்ணாதே! அப்படி நீ எண்ணினால், உன் மலரும் முள்ளாகும்!.

## 4. மரணத்தின் முள் :

"நான் மரண இருளின் பள்ளத்தாக்கில் நடந்தாலும் பொல்லாப்புக்குப் பயப்படேன்'' (சங் 23:4) என்று தாவீது மரணத்தைக் குறித்து ஆறுதலடைகிறார். ஜார்ஜ் குட்மேன் என்ற பக்தன் கூறுகிறார், "என் வாழ்க்கை நெறிந்த நாணலாயிற்று, அதிலிருந்து நல்ல சங்கீதம் வராது. என் வாழ்வு மங்கி எரியும் தீபம்! ஆனாலும் இருண்ட வேளையில், என் கண்களை மூடித் திறக்கும்பொழுது என்னருகே கால் தடங்களைக் காண்கிறேன்! ஆம். என் கர்த்தர் அந்த இருண்ட வேளையில் - வியாதிப்படுக்கையில் என்னோடிருந்திருக்கிறார்.''


ஒரு அழகான சிறுமி ஒரு கண்ணாடிப் பெட்டியில் விழுந்து காயம் அடைந்தாள். டாக்டர் சின்ன காயம்தான் என்று சிகிச்சை அளித்து வீட்டிற்கு அனுப்பிவிட்டார். சில மாதங்கள் கழித்து சிறுமி ஜுரத்தில் படுத்தாள். இரண்டு நாட்களுக்குள் திடீரென்று மரித்துப்போனாள். குழந்தையை அடக்கம் செய்யும்பொழுது தகப்பன் தன் பிள்ளையின் மீது விழுந்து அழும்பொழுது, சுரீரென்று அவன் உதட்டை ஏதோவொன்று கிழிக்கிறது. தொட்டுப் பார்த்தால் ஒரு கண்ணாடித் துண்டு. டாக்டர் கவனக் குறைவாக விட்டுவிட்ட இந்தக் கண்ணாடித் துண்டுதான் சிறுமியின் அகால மரணத்திற்குக் காரணம். தாங்கமுடியா சோகத்தோடு தகப்பன், நடைபிணம் போல் அலைந்தார். ஒரு நாள் ரயிலில் பிரயாணம் செய்யும்பொழுது, ஒரு மனிதன் மிகுந்த சோகத்தோடு இருப்பதைக் கண்டு, "சகோதரனே! ஏன் இவ்வளவு கவலையோடு இருக்கிறாய்?" என்று கேட்டார்.

"என் அருமை மகள்... எட்டு வயதில் ஒரு கண்ணாடிப் பெட்டியில் விழுந்து, திடீரென்று மரித்துப்போனாள். அவளது முகத்தை மறக்கவே முடியவில்லை... என்னைப்போன்ற துயரமுள்ள மனிதன் இப்படித்தானே இருக்க முடியும்?" என்றான். அந்தச் சகோதரன், "உன்னைப் போன்று அதே நிலையில் உள்ள மனுஷன்தான் நானும்... என் அருமை மகளும் எட்டு வயதில் இப்படித்தான் மரித்துப் போனாள். ஆனால் அவள் தேவனது சமூகத்தில் இருக்கிறாள் என்ற நம்பிக்கை என் துக்க வெள்ளத்திற்கு அணைபோட்டுவிட்டது! நீங்களும் அந்த இயேசுவிடம் முட்கள் நிறைந்த உங்கள் ஆத்துமாவைக் கொடுங்கள்" என்றார். இவரது ஆறுதலின் சரித்திரம், அவரது முட்களைப் பிடுங்கி எறிந்தது.

"தேவனால் எங்களுக்கு அருளப்படுகிற ஆறுதலினாலே எந்த உபத்திரவத்திலாகிலும் அகப்படுகிறவர்களுக்கு நாங்கள் ஆறுதல் செய்யத் திராணியுள்ளவர்களாகும்படி, எங்களுக்கு வரும் சகல உபத்திரவங்களிலேயும் அவரே எங்களுக்கு ஆறுதல் செய்கிறவர்." (2கொரி. 1:4) இந்த வார்த்தைகளின்படி, அந்தச் சகோதரன் இன்னொரு சகோதரனுக்கு ஆறுதலின் வாய்க்காலாக விளங்கினார்! உன் துன்ப முட்கள் ஆறுதலின் மலர்களாக மலரும்.

இதை வாசிக்கும் உனக்கு ஒரு செய்தி! யாக்கோபு ஐயோ! என்று அழுதது பொய்யானது! அவன் மகனை மரணத்திலல்ல, அழகான இரதத்தில் சந்தித்தான்! அதைப்போல அனேக முட்கள், நிஜமுட்கள் அல்ல! சாத்தான் காட்டும் போலி முட்கள்! இவை அகன்றுபோம்! யாக்கோபுவின் துக்கம், சந்தோஷ மலராயிற்று!

**உன் வாழ்விலும் துக்கம்**
**சந்தோஷமான மலராக மாறும்**



# சாம்பல் மலராயிற்று

பாடுகள், உபத்திரவங்கள், சோதனைகள் இவையெல்லாவற்றையும் சகித்து, வேதனைத் தீயைக் கடந்து மலரும் விசுவாசப் பூக்களில் ஒன்றுதான் ஆபிரகாம். இந்த வாழ்க்கை மலரின் இதழ்களைப் பார்ப்போம்.

## வாழ்க்கை என்றால் என்ன?

நான் குழந்தையாயிருக்கும்பொழுது சிரித்தேன்;
அழுதேன், அப்பொழுது நேரம் ஊர்ந்தது.

நான் வாலிபனாயிருந்தபொழுது நான் கனவு கண்டேன்;
பேசினேன், அப்பொழுது நேரம் நடக்க ஆரம்பித்தது.

நான் முழு வளர்ச்சியுள்ள மனிதனானபொழுது
நேரம் ஓட ஆரம்பித்தது.

பின்னர் நான் மிகவும் வயது சென்றவனானேன்;
அப்பொழுது நேரம் பறந்தது.

சீக்கிரத்தில் நான் பயணிக்கும்பொழுதே கண்டேன்;
நேரம் முடிந்து விட்டது.

இப்படி ஓடி முடிவது அல்ல வாழ்க்கை. அறைகூவல்களையும் பாடுகளையும், பிரச்சனைகளையும் சந்தித்து வெற்றிகரமாகக் கடந்து வருவதே வாழ்க்கை. தனது 75 ஆம் வயதிலும் ஆபிரகாம் பிரச்சனைகளைச் சந்தித்தான். அந்த வயதில் தான் விசுவாசப் பள்ளிக்கூடத்தில் ஆரம்ப வகுப்பு மாணவனாக ஆபிரகாம் சேர்க்கப்பட்டான். 100 வயதிலும் அவன் பாடங்களைக் கற்றுக் கொண்டே இருந்தான். நாம் கற்பதை நிறுத்தினால் நாம் வளர்வது நின்றுவிடும்; நாம் வளர்வதை நிறுத்தினால் வாழ்வது நின்று விடும்.

## எந்தப் பாடத்தைக் கற்க வேண்டும்?

ஆரம்பமான 40 வருடங்களில் ஆபிரகாம் கற்ற பாடநூல், "விசுவாசத்தால் நீதிமான் பிழைப்பான்." (ஆபகூக் 2:4) மீதியுள்ள வருடங்களில் அந்தப் பாடத்திற்கான விளக்கங்கள், விரிவுரைகள், அர்த்தங்கள் இவற்றை ஆபிரகாம் கற்றான். இவற்றைக் கற்க கர்த்தரின் வார்த்தையை உன்னிப்பாகக் கேட்டான். நீங்கள் இந்த விசுவாசப் பள்ளியில் படிக்கிறீர்களா? எத்தனையாவது பாடத்தைப் படிக்கிறீர்கள்? இந்தப் பாடம் கஷ்டமாக இருக்கிறது; இதைப் படிக்க மாட்டேன் என்று தள்ளுவீர்களானால் கிறிஸ்தவ வாழ்க்கை எனும் பரீட்சையில் வெற்றி பெற மாட்டீர்கள்.

## முதல் பாடம்: விசுவாசக் கீழ்ப்படிதல்

இந்தப் பாடம் ஆபிரகாமிற்குச் சோதனைகளைச் சந்திக்கும் முறைகள், ஆற்றல்கள் இவற்றைக் கற்பித்தது. ஆபிரகாமின் சோதனை அறிக்கை :

விசுவாசப்பள்ளி : பெயர் : ஆபிரகாம்

பாடங்கள் :

| | | | |
|---|---|---|---|
| 1) | குடும்ப பரீட்சை | ஆதி 12:1,2 | பாஸ் |
| 2) | பஞ்ச காலப்பரீட்சை | ஆதி 12:10 | ∴பெயில் |
| 3) | ஐக்கியப் பரீட்சை | ஆதி 13:9 | பாஸ் |
| 4) | போராட்டப் பரீட்சை | ஆதி 14:16 | பாஸ் |
| 5) | தகப்பனாகும் பரீட்சை | ஆதி 16:2 | ∴பெயில் |

ஐந்து பாடங்களில் இரண்டு பாடங்களில் வெற்றி பெறவில்லை.

## ஆவியானவரின் குறிப்புகள் :

1. **பஞ்ச காலப் பரீட்சை :** தேசத்தில் பஞ்சம் உண்டானவுடன் அழைத்த கர்த்தரே தனக்குத் தஞ்சம் என்றிருந்திருக்க வேண்டும். ஆபிரகாம் கர்த்தரின் சித்தத்திற்கு மாறாக, எகிப்து தேசம் சென்றபடியால் அவனுக்குக் கடுமையான விளைவுகள் உண்டாயின. அவையாவன :

1) ஆபிரகாம் தன் மனைவியைச் சகோதரி என்று பொய் சொன்னான்.

2) வீணாகப் பார்வோனுக்கு பயப்படவேண்டியதாயிற்று.

3) வாக்குத்தத்த மகன் பிறக்காமல் போகும் வாய்ப்பு ஏற்படக் காரணமானான்.

4) சாராளுக்கு வீண் தொல்லைகள் உண்டாயின.

கொஞ்ச நேரம் ஆபிராகாம் யோசிக்கத் தவறியதால் இப்படி வீண் பிரச்சனைகள். ஆகவே இந்தப் பரீட்சையில் ஆபிரகாம் தோற்றுப் போனான்.

## 2. தகப்பனாகும் பரீட்சை :

வாக்குத்தத்த மகனாகிய ஈசாக்கு பிறப்பதற்கு ஆபிரகாமின் சரீரம் செத்துப்போக வேண்டும். சரீரம் சாகும் வேளை வரைக்கும் ஆபிரகாம் காத்திருக்க வேண்டும். ஆனால் சாராளின் தவறான யோசனைப்படி ஆகாரை எடுத்துக் கொண்டதால் இஸ்மவேல் என்ற துஷ்டன் பிறக்கக் காரணமானான். இதுவும் ஆபிரகாமின் பெரிய தோல்வி.

எல்லா பாடுகளும் சோதனைகளும் உண்மையான பரீட்சைகளா? இல்லை, சில சமயங்களில் நம்முடைய தவறுகளினால் ஏற்படும் விளைவுகளை நாம் கடவுளின் சோதனைகள் என்று தவறாக எண்ணிவிடுகிறோம். ஆபிரகாம் எகிப்தில் அனுபவித்த பாடுகள் கடவுளால் உண்டான சோதனைகள் அல்ல. கர்த்தருக்கு நீங்கள் கீழ்ப்படியாததினால் உங்கள் வாழ்வில் ஏற்படும் நெருக்கங்களுக்கு கர்த்தர் பொறுப்பல்ல.

இயற்கையாக நடைபெறும் மரணம், உண்டாகும் நோய்கள், ஏமாற்றங்களை கர்த்தரின் சோதனைகள் என்று எண்ணக்கூடாது. இயற்கையாக நடைபெறும் இச்சம்பவங்களில் கடவுளுக்கு ஓர் நோக்கமும் கிடையாது. கடவுளின் நோக்கமில்லா சம்பவங்கள் கடவுளின் சோதனைகள் அல்ல. மோசே வியாதிப்பட்டிருப்பதில் கடவுளுக்கு ஓர் நோக்கம் இருந்தது. மோசேயின் குமாரன் விருத்தசேதனம்

செய்யப்படாததால் கடவுள் மோசேயைக் கொல்லப்பார்த்தார். ஆனால் சிப்போராள் அந்தத் தவறைச் சரி செய்தவுடன் மோசே குணமானான். ஆனால் எல்லா வியாதிகளிலும் கடவுளின் நோக்கமிராது. இத்தகைய சமயங்களில் நாம் வேதனையோடு சகித்துப் போக வேண்டியதுதான்.

## சோதனைகள் இரண்டு வகை :

### 1) சாத்தானின் சோதனை :

இது வெளியே இருந்து வருவதல்ல. நமக்குள்ளேயே இந்தச் சோதனை ஏற்படுகிறது. "அவனவன் தன்தன் சுய இச்சையினாலே இழுக்கப்பட்டு, சிக்குண்டு சோதிக்கப்படுகிறான்." (யாக் 1:14) இது சாத்தானின் தூண்டுதல். இந்தச் சோதனையின் நோக்கம் நம்மிலுள்ள தீய சுபாவத்தை வெளியே கொண்டு வந்து நிறுத்துவது. பண ஆசை, பெண் ஆசை, பதவி ஆசை என்னும் சோதனைகள் கர்ப்பந்தரித்து பாவத்தைப் பிறப்பிக்கும்.

### 2. கடவுளால் சோதனை :

கடவுள் நம்மைச் சோதிப்பது, நம்மில் உள்ள நன்மையை வெளியே காட்டுவதற்காக. யோபு சோதிக்கப்பட்ட பின்பு பொன்னாக விளங்கினான். இத்தகைய உன்னத நோக்கத்திற்காக இப்பொழுது ஆபிரகாம் சோதிக்கப்படுகிறான். ஆபிரகாமின் சோதனை, விசுவாச அழைப்பிற்குக் கீழ்ப்படிதல்! எல்லா விசுவாசிகளுக்கும் பாவச் சோதனைகள் ஒன்றுபோல் தானிருக்கும். ஆனால் விசுவாசச் சோதனைகள் அவரவர் திராணிக்குத் தக்கதாக அமையும், ஆபிரகாமைச் சோதித்த கடவுள் லோத்தை சோதிக்கவே இல்லை. திராணியே இல்லாதவர்களைக் கர்த்தர் சோதிக்கமாட்டார்.

ஆகவே முதல் பாடம், கடவுளிடமிருந்து சோதனைகளை எதிர்பார்ப்பதே. இரண்டாவது பாடம், வாக்குத்தத்தத்தைப் பற்றிக்கொள்வதே. விபரம் கேட்காதே. கடவுளது வாக்குத்தத்தம் நமக்கு விளங்காமல் இருக்கலாம். உடனே கடவுளிடம் விபரம் கேட்கக் கூடாது. விசுவாசித்துப் பொறுமையோடு கர்த்தரின் நடத்துதலுக்காக காத்திருக்க வேண்டும். இதுவே

விசுவாசப்பாதை. விசுவாசப்பாதை எது? பொறுக்கவே முடியாததைப் பொறுத்துக் கொள்வது. அறிவுக்கு எட்டாததை நம்புவது. கூடாது என்பதைக் கூடும் என்று எண்ணுவது இதுதான் விசுவாசப்பாதை.

## இந்தப் பாதையில் ஆபிரகாமின் அழைப்பு :

ஈசாக்கைப் பலியிடுவது பொறுத்துக் கொள்ள முடியாதது. வாக்குத்தத்த மகனைப் பலியிடுவது அறிவுக்கு எட்டாதது. பலியிட்ட பின் ஈசாக்கின் மூலம் பெரிய சந்ததி உண்டாகும் என்பது கூடாதது. ஆனால் ஆபிரகாம் அவை எல்லாவற்றையும் விசுவாசித்தான். பொதுவாகக் கடுமையான சூழ்நிலைகளில் நாம் எழுப்பும் கேள்வி, "ஆண்டவரே, ஏன் எனக்கு?" இந்தக் கேள்வியை எல்லோருமே எளிதிற் கேட்டுவிடுகிறோம்.

உங்களுக்கு ஓர் சம்பவத்தைக் கூற விரும்புகிறேன். ஒரு பெரிய டாக்டரைச் சந்தித்துப் பேசிக் கொண்டிருந்தேன். அந்த டாக்டர் அம்மா எட்டு வயது குழந்தையாயிருக்கும் பொழுது சமையலறையில் தீப்பிடித்து அவர்களது முகம், கழுத்து எரிந்து போய்விட்டது. வாழ்க்கையில் பல இன்னல்களையும், எதிர்ப்புகளையும், அவமானத்தையும் சந்தித்த இந்த டாக்டரம்மா கடவுளின் கிருபையால் படித்து முன்னேறி ஓர் திறமையான டாக்டரானார். இவர் ஒரு புத்தகம் எழுத ஆரம்பித்தார். அந்தப் புத்தகத்தின் தலைப்பு : "ஆண்டவரே, ஏன் எனக்கு?" இந்தப் புத்தகம் எழுதி முடிக்கப்படுவதற்கு முன்பு புத்தகத்தின் தலைப்பை மாற்றி விட்டார்கள். இப்பொழுது அந்தப் புத்தகத்தின் தலைப்பு, "ஆண்டவரே, எனக்கு ஏன் இருக்க கூடாது?" (Lord, why not me?)

இப்படி எல்லாச் சூழ்நிலைகளிலும், எனக்குக் கடவுள் இப்படிச் செய்யவும் உரிமை உண்டு என்று கடினமான சோதனையில் கடவுள் சித்தத்திற்கு விட்டு விட வேண்டும். ஏன் என்று ஆயிரம் முறைக் கேட்டாலும் கர்த்தர் நமக்குப் பதில் தரப்போவதில்லை. ஆனால் சோதனையின் நோக்கங்களை நாம் எளிதாய்ப் புரிந்து கொள்ளலாம். அவையாவன:

நம்மைப் பரிசுத்தப்படுத்த (1 பேதுரு 1:7)
நம்முடைய சுபாவத்தைப் பூரணப்படுத்த (யாக்கோபு 1:4)
பாவத்தினின்று நம்மைப் பாதுகாக்க (1 கொரி 12:10)

ஆபிரகாம் கடவுளின் சோதனையை அப்படியே ஏற்றுக் கொண்டான். ஏனெனில் ஈசாக்கினிடத்தில் உன் சந்ததி விளங்கும் (ஆதி 21:12) என்ற வாக்குத்தத்தத்தை அவன் பலமாக விசுவாசித்தான். ஆகவே ஈசாக்கு பலியிடப்பட்டாலும் அவன் மறுபடியும் உயிரோடு கொண்டு வரப்படுவான் (எபி. 11:18) என்று உறுதியாய் நம்பினான்.

"நாங்கள் தொழுது கொண்டு திரும்ப வருவோம்" (ஆதி 22:5) என்ற அறிக்கை இந்த விசுவாசத்தைப் புலப்படுத்தியது. அதாவது மலையுச்சியிலிருந்து திரும்பும்போது செத்துப்போன ஈசாக்கின் உடலை நான் சுமந்து வருவதில்லை என்றும் அவனை உயிரோடு கொண்டு வருவேன் என்றும் நம்பினான். இத்தகைய விசுவாசம் நமக்கு உண்டா? சந்தர்ப்ப சூறாவளிகள் தேவனது வாக்குத்தத்த மலர்க்கொடியை சிதைத்துவிடுவது போலிருந்தாலும் அது சிதையாது என்று உறுதியாய நம்ப வேண்டும்.

## ஆபிரகாமின் விசுவாசத்தின் ஆழங்கள்

1) **எங்கே** என்று தெரியாத வேளையில் அவன் கர்த்தரை விசுவாசித்தான். வாக்குத்தத்த நாட்டிற்கு கடவுள் அவனை அழைத்தபோது போகுமிடம் இன்னதென்று அறியாமல் அவன் புறப்பட்டது பெரிய விசுவாசம்.

2) **எப்பொழுது** என்று அறியாமல் அவன் புறப்பட்டான். எப்பொழுது பரம நகரத்தை அடைவோம் என்று அறியாவிட்டாலும் கடவுள் தாமே கட்டி உண்டாக்கின அஸ்திபாரங்களுள்ள நகரத்துக்கு அவன் காத்திருந்தான்.

3) **எப்படி** என்று அறியாமல் விசுவாசித்தான். சரீரஞ் செத்தவனென்று எண்ணத்தகும் ஒருவனாலே வானத்திலுள்ள பெருக்கமான நட்சத்திரங்களைப்போல மிகுந்த ஜனங்கள் எப்படி பிறப்பார்கள் என்று அறியாமல் விசுவாசித்தான்.

4) **ஏன்** என்று அறியாமல் விசுவாசித்தான். தன் ஒரே பேறான தன் குமாரனைக் கர்த்தர் பலியிடும்படி சொல்லும்போது ஏனென்று புரியாமல் கீழ்ப்படிந்தான்.

## அவனுடைய விசுவாசத்தின் அஸ்திபாரம் என்ன?

"கர்த்தர் பார்த்துக் கொள்வார்" என்பதே அவனது விசுவாசத்தின் அஸ்திபாரம். தன் மகன் பலியிடப்பட்டு சாம்பலாய்ப் போனாலும் தன் மகனைத் திரும்பக் கொண்டு வருவார் என்பது ஆபிரகாமின் விசுவாசம். அவன் காலத்தில் ஒருவரும் உயிரோடு எழுப்பப்படாத நிலையிலும் தன் மகன் உயிரோடு எழுந்திருப்பான் என்று அவன் விசுவாசிக்கக் காரணம் என்ன? தன் மனைவியின் செத்துப்போன கர்ப்பமும், செத்துப்போன தன் சரீரமும் ஏற்கனவே உயிர் மீட்சிப் பெற்றதை அவன் அனுபவித்திருந்தான். ஆகவே என்னைப் பெலப்படுத்துகிற கடவுளால் எல்லாவற்றையும் செய்ய பெலனுண்டு என்று விசுவாசித்து தன் மகனைப் பலியிட ஆயத்தமானான்.

## எங்கே கர்த்தர் பார்த்துக் கொள்வார்?

கடவுளின் கட்டளைக்குக் கீழ்ப்படிந்து, அவன் நின்ற அந்த இடத்தில் கர்த்தர் பார்த்துக் கொள்வார் என்று அந்த இடத்திலே அங்கே நின்றான்!

## எப்பொழுது பார்த்துக் கொள்வார்?

மனிதனுடைய அறிவுக்குப் புரியாத வேளையில் பார்த்துக் கொள்வார்.

## ஏன் பார்த்துக் கொள்வார்?

கடவுளின் நாமம் மகிமைப்பட அவர் பார்த்துக் கொள்வார்.


## கேள்வியும் பதிலும்.

பலியிட ஆட்டுக்குட்டி (Lamb) எங்கே? இதற்கு கிடைத்த பதில் : புதரிலே சிக்குண்டிருந்த ஒரு ஆட்டுக்கடா (Ram). இளம் ஆடு எங்கே என்பது கேள்வி. கிடைத்த பதிலோ முரட்டு செம்மறியாடு. அப்படியானால் இந்தக் கேள்விக்குச் சரியான

பதிலே கிடையாதா? உண்டு. "இதோ உலகத்தின் பாவத்தைச் சுமந்து தீர்க்கும் தேவ ஆட்டுக்குட்டி" என்பதே சரியான பதில். இன்று தேவனது பதில் உனக்குச் சரியாக விளங்காமல் போகலாம். காத்திரு. இன்னொரு நாள் அது விளங்கும்.

இப்பொழுது மலையுச்சியில் ஆபிரகாமும் ஈசாக்கும். மலையிலிருந்து இறங்கிய ஆபிகாமைத்தான் பார்க்கிறோமே தவிர ஈசாக்கைக் காணவேயில்லை. உங்கள் கண்கள் ஈசாக்கை ஆவலாய்த் தேடுகின்றனவா? இதோ ஈசாக்கு சாராளுடைய கூடாரத்தில் தன் மணவாட்டி ரெபேக்காளோடு ஈசாக்கைச் சந்திக்கிறோம். (ஆதி. 24:67)

நமது ஆண்டவராகிய இயேசு கிறிஸ்துவாகிய பரம ஈசாக்கை மத்திய வானத்தில் நாம் மணவாளனாக சந்திக்கும்பொழுது, "நாம் சந்தோஷப்பட்டுக் களிகூர்ந்து அவருக்குத் துதி செலுத்தக்கடவோம். ஆட்டுக் குட்டியானவருடைய கலியாணம் வந்தது. அவருடைய மனைவி தன்னை ஆயத்தம் பண்ணினாள்." (வெளி 19:7) உபத்திரவ சாம்பலில் திருச்சபை மணவாட்டியாய் மலர்கிறது.



# சேற்றில் பூத்த மலர்

கானான் பாவத்தின் தேசம்! விக்கிரக ஆராதனைகள், அசுத்தமான வழிபாடுகள், தரங்கெட்ட வாழ்க்கை முறைகள் இவை நிறைந்த எரிகோ பட்டணம். அந்தத் தேசத்தில், இந்த அவலட்சண நகரில் வாழ்ந்தாள் ஒரு வேசி. அவள் பெயர்தான் ராகாப். வேசி என்று ஊராரால் அழைக்கப்பட்டவள், பாவ சேற்றினில் வாழ்ந்தவள், விசுவாசி என்று பின்னர் அழைக்கப்பட்டாள். பரிசுத்தவான்களின் பட்டியலிலும் பின்னர் இடம் பெற்றாள். ஒருவருடைய கடந்தக்காலம் எப்படியுமிருக்கட்டும், அவர் வாழ்க்கையின் இறுதிக்காலம் எப்படியிருக்கிறது என்பதே முக்கியம்.

ஆவியானவர் துணையோடு, அடக்கமான உள்ளத்தோடு ஆட்சியைப் பிடித்தவன், தன் ஆணவத்தினால் சீர்குலைந்துபோன வரலாறே சவுலின் சரித்திரம். நல்ல துவக்கம், பரிதாபமான முடிவு. இதுவே இஸ்ரவேலின் முதல் மன்னன் சவுலின் வரலாறு. பாவத்தில் துவக்கம், பரிசுத்தத்தில் முடிவு. இதுவே ராகாப்பின் வரலாறு. எபிரேய நிருபம் இரண்டு பெண்களை நமக்குச் சுட்டிக் காட்டுகிறது. இரண்டு பேருமே மிக வித்தியாசமானவர்கள். ஒருவள் சாராள், மற்றொருவள் ராகாப். சாராள் பரிசுத்தவாட்டி என்று அறிமுகப்படுத்தப்பட்டவள். விபச்சாரி என்ற அறிமுகத்திற்கு சொந்தமானவள் ராகாப். ஆனால் சத்திய வேதம் இருவரையும் இணைத்துப் பேசுகிறது. இருவருமே இரட்சிப்பிற்கேற்ற விசுவாசமுடையவர்களாய் இருந்தனர்.

இயேசு பிறந்த வம்ச அட்டவணையில் ராகாப்பின் பெயரும் இடம் பெற்றது மாபெரும் சிலாக்கியம். ராகாப்பின் பட்டணம் என்று அழைக்கப்பட எரிகோ பட்டணம் வெட்கப்பட்டது.

ராகாப்பின் தேவன் என்றழைக்கப்பட நம் தேவன் வெட்கப்படவில்லை. ஏனெனில் அவள் வாழ்க்கைச் சரித்திரம் பரிசுத்தத்தில் முடிந்தது. இந்த அருமையான பெண்ணின் வாழ்க்கையைப் பாருங்கள்.

## 1. பயங்கரமான கடந்த காலம் :

ஒவ்வொரு மனிதனுக்கும் ஒரு அவலட்சணமான கடந்த காலம் உண்டு. அல்லது ஒரு கசப்பான காலம் உண்டு. ராகாப் எரிகோவின் அஞ்ஞான ஆலயத்தில் ஒரு தேவதாசி. இளம் பிராயத்திலிருந்தே தெய்வத்தின் பெயரால் கற்பை இழந்தவள். சுருக்கமாக சொல்லப் போனால் She lived by sin for sin and of sin. அவள் பாவத்தில், பாவத்திற்காக, பாவத்தினுடைய வாழ்க்கையை வாழ்ந்தாள். அவள் வாழ்ந்த கானானும், கானானில் வாழ்ந்த அவளும் தேவ தண்டனைக்குரியவர்களாய் இருந்தனர். கானான் தேசத்தை வாக்குத்தத்த நாடாக மாற்ற கர்த்தர் விரும்பினார். இதற்கு நானூறு ஆண்டுகள் கர்த்தர் காத்திருக்க வேண்டியதாயிற்று. அந்தக் காத்திருப்பின் காலம் முடிந்து எரிகோ மீது தேவ தண்டனை விழும் நேரம் வந்தது. அந்த நியாயத்தீர்ப்பு வேளையில் கர்த்தரின் கரம் ராகாப்பைத் தூக்கி எடுத்தது. அஸ்தரோத்தின் முன் அவலட்சண நடனமாடியவள் சர்வ வல்லவரிடம் சரணடைந்தாள். வேசி என்ற கடந்த காலம் முடிந்து விசுவாசி என்ற நிகழ்காலம் தொடங்கிற்று. பரத்தை என்றழைக்கப்பட்டவள் பரிசுத்தவாட்டியானாள். சகோதரனே, சகோதரியே, உங்கள் கடந்த காலம் எவ்வளவு சீர்கெட்டதாயிருந்தாலும் உங்கள் வாழ்வு சீரடைய இன்னும் வழி திறந்திருக்கிறது. அந்த வழி எருசலேம் நகர வாசலுக்கு வெளியே இருக்கிற சிலுவையில் ஆரம்பிக்கிறது.

## 2. அவளுடைய பாதுகாப்பு :

ஒரு மனிதனுடைய பாதுகாப்பு அவனுடைய சூழ்நிலை. முக்கியமாக ஒருவனுடைய வீடு அவனுக்கு பாதுகாப்பு. ஆபத்து வந்ததும் வீட்டை நோக்கிதான் ஓடுகிறான். ராகாப்பின் வீடு அலங்கத்தின் மதிலிலிருந்தது. அலங்கத்திலே அவள்

குடியிருந்தாள். எரிகோ நகரத்திற்குப் பாதுகாப்பு இரட்டை மதில்கள். இரண்டு சுவர்களும் 30 அடி உயரம், வெளிச்சுவர் 6 அடி அகலமுடையது. உட்சுவரோ 12 அடி அகலமுள்ளது. இந்த இரட்டைச் சுவர்களுக்கு மத்தியில்தான் ராகாபின் வீடு இருந்தது. இது ஒரு பாதுகாப்பான இடம்தான். இந்த பாதுகாப்பைத்தான் ராகாப் மிகவும் நம்பியிருந்தாள். எந்தப் போரும் எந்த யுத்தமும் தன் வீட்டிற்கு சேதம் விளைவிக்காது என்பதே அவள் நம்பிக்கை.

பாதுகாப்பு என்று நாம் எண்ணுகிற இரட்டைச் சுவர்கள் நமக்கு இருக்கின்றன. மதமும் பக்தியும் மதவாதிக்குப் பாதுகாப்பான இரட்டைச் சுவர்கள். பணமும் பதவியும் அரசியல்வாதிக்கு இரட்டைச் சுவர்கள். ஆலயமும் திருவிழாவும் ஆன்மீகவாதிக்கு இரட்டைச் சுவர்கள். பேரும் புகழும் தனி மனிதனுக்கு இரட்டைச் சுவர்கள். ஞானஸ்நானமும் திருவிருந்தும் பாரம்பரிய கிறிஸ்தவனுக்கு இரட்டைச் சுவர்கள். ஆனால் இந்த இரட்டைச் சுவர்களெல்லாம் வாழ்க்கையில் ஏற்படும் பூகம்ப சம்பவங்களால் அழிந்து போகும். புதிய ஜீவனற்ற வாழ்க்கை ஞானஸ்நான கோட்டையைத் தகர்க்கும். கல்வாரி தியானமில்லா வாழ்க்கை திருவிருந்து என்ற சடங்காச்சாரக் கோட்டைச் சுவரைத் தகர்க்கும்.

வெறும் ஆவிக்குரிய சடங்காச்சாரங்கள் மனிதனுக்குப் பாதுகாப்பல்ல. உலகின் மதங்களும் வழிபாடுகளும் ஆன்மாவிற்கு பாதுகாப்புச் சுவர்களல்ல. எக்காள சத்தத்தில் எரிகோவின் பிரமாண்ட அலங்கங்கள் விழுந்தன. விண்ணை அதிர வைக்கும் எக்காள சத்தமல்ல அது. சாதாரண ஆட்டுக் கொம்பின் சத்தம் அவ்வலங்கங்களைத் தகர்த்தது. உலகிலுள்ள மதவாதக் கோட்டைகள், ஜாதிக் கோட்டைகள், இனவெறிக் கோட்டைகள்... இவைகளை சீர்திருத்த பீரங்கிகள் தகர்க்க முடியாது. புரட்சி சிந்தனை அலைகள் இக்கோட்டைகளை அசைக்க முடியாது. ஆனால் திருச்சபையின் சத்தம் அது ஒரு ஆட்டுக் கொம்பின் சத்தமாகவே இருக்கட்டும். பரிசுத்த ஆவியின் வல்லமையினால் இந்த மெல்லிய சத்தம் மாபெரும் கோட்டைகளைத் தகர்க்கும்.

தான் பாதுகாப்பு என்று எண்ணிய கோட்டைகளோ தான் வணங்கிய அஸ்தரோத்தோ தனக்குப் பாதுகாப்பல்ல என்பதை ராகாப் உணர்ந்தாள். இது நல்ல உணர்வு. இந்த உணர்வே அவளது பாதுகாப்பின் அடித்தளமாய் அமைந்தது.

## 3. கேள்விப்பட்டு விசுவாசியானாள் :

"நீங்கள் எகிப்திலிருந்து புறப்பட்டபோது ... கர்த்தர் செய்த எல்லாவற்றையும் கேள்விப்பட்டோம். கேள்விப்பட்டபோது எங்கள் இருதயம் கரைந்து போயிற்று. உங்களாலே எல்லாருடைய தைரியமும் அற்றுப் போயிற்று" (யோசு 2:10,11) என்பது ராகாப் கண்டபோதல்ல, கேள்விப்பட்டபோது. அவள் கொடுத்த அறிக்கை, "உங்கள் தேவனாகிய கர்த்தரே உயர வானத்திலும், கீழே பூமியிலும் தேவனானவர்" என்பதே! இது எத்தனை மகத்துவமான விசுவாச அறிக்கை. இந்த அறிக்கையை அவள் வெளியிட எவ்வளவு மனமாற்றம் ஏற்பட்டிருக்க வேண்டும்?

அஸ்தரோத் என்ற அசுத்தமான விக்கிரகத்திற்கு முன்பு, தன் உடலை ஆபாசத்திற்கு விருந்தாக்கிய ராகாப், ஜீவனுள்ள தேவனை ஏற்றுக் கொண்டது, வாழ்க்கையில் ஏற்பட்ட ஆழமான மாற்றங்களின் எதிரொலி.

இந்த அறிக்கைக்கு மிகவும் துணிச்சல் வேண்டும். இயேசுவையும் நாங்கள் நம்புகிறோம் என்று நமது நற்செய்திக் கூட்டத்தில் மலிவான சாட்சி சொல்கிறார்களே, அப்படிப்பட்டவர்களின் மந்த இதயம் அல்ல ராகாப்பின் இதயம்.

சமாரியாவில் குடியேறிய மக்களின் வினோதமான விசுவாசத்தைப் போன்றதல்ல ராகாப்பின் விசுவாசம். "அவர்கள் கர்த்தருக்குப் பயந்தும் தாங்கள் விட்டு வந்த தங்கள் தேவர்களையும் சேவித்து வந்தார்கள்" (2இரா. 17:33) என்பதே அவர்களின் இரட்டை நிலை. ரிம்மோன ஆலயத்தில் பணிந்து கொள்ள ராகாப் விரும்பவில்லை. யோர்தான் நதிக்கரையிலேயே ரிம்மோன் மீதுள்ள நம்பிக்கையை தன் இதயத்திலிருந்து தூக்கி எறிந்துவிட்டாள். சகோதரனே, கிறிஸ்துவின் மேலுள்ள நம்பிக்கையோடு வேறு நம்பிக்கைகளைக் கூட்டாதீர்கள். நாள், நேரம், கிழமை, நட்சத்திரம் இவைகள் மீது உங்களுக்கு

நம்பிக்கைகள் இருந்தால் நீங்கள் கிறிஸ்தவர்கள் அல்ல. கிறிஸ்தவனுக்கு வேறு தெய்வ நம்பிக்கைகளே கிடையாது. இயேசு ஒருவரே தெய்வம், ராகாப் தேவனை நம்பினாள். அவர் ஆசீர்வதிக்கிற தேவன் என்பதை மட்டுமல்ல, அவர் தண்டிக்கிறவர் என்பதையும் நம்பினாள். கர்த்தரே நீதி தவறாத நியாயாதிபதி என்று விசுவாசித்தாள். உடனே ஜாக்கிரதைப்பட்டாள். அந்த வேவுகாரர்களை அவள் மனதார ஏற்றுக் கொண்டாள். நாம் எப்படியிருக்கிறோம்?

இயேசுவின் முதலாம் வருகையை ஆண்டின் இறுதியில் துள்ளிக் குதித்து கொண்டாடும் கிறிஸ்தவர்களே, இயேசுவின் இரண்டாம் வருகைக்கு ஆயத்தப்படுகிறோமா? பிறந்தார், பிறந்தார் என்ற சத்தத்தை எழுப்புகிற நாம் அவர் வருவார், வருவார் என்ற சத்தத்தை எழுப்புகிறோமா? கிழக்கிலே கண்ட நட்சத்திரத்தை எண்ணி மகிழ்கிற நாம் கடைசி நாள்களிலே அத்திக்காய்கள்போல உதிர்ந்து விழும் நட்சத்திரக் கூட்டங்களை எண்ணி ஜாக்கிரதைப்படுகிறோமா? விசுவாசம் கடந்த கால நினைவுப் பெட்டகமல்ல, எதிர்காலத்தைச் சந்திக்கும் சவால்.

## 5. ராகாபின் பொய் :

வேவுகாரர்களைத்தேடி ராகாபின் வீட்டைத் தேடிவந்த அதிகாரிகளிடம், “மெய்தான், என்னிடத்தில் மனுஷர் வந்திருந்தார்கள். ஆனாலும் அவர்கள் எவ்விடத்தாரோ எனக்குத் தெரியாது... இருட்டு வேளையிலே அவர்கள் போய்விட்டார்கள். அவர்கள் எங்கு போனார்களோ எனக்குத் தெரியாது” (யோசு 2:4) என்று ராகாப் பொய் சொன்னாள். உண்மையில் அவள் அந்த மனிதர்களைத் தன் வீட்டிலே அப்பொழுது ஒளித்து வைத்திருந்தாள். இப்படி ராகாப் பொய் சொன்னதைத் தேவன் கண்டிக்கவில்லையே. இக்கட்டான நேரத்தில் நாமும் அவளைப்போல பொய் சொல்லலாமா என்று சிலர் கேள்வி கேட்கின்றனர். பாவம் செய்ய வாய்ப்பு இருந்தால் பாவஞ் செய்யலாம் என்ற துணிகர உள்ளமே இந்தக் கேள்வியை உருவாக்குகிறது. ராகாப் பொய் சொன்னது முன்மாதரியல்ல. நாம் பொய் சொல்லவே கூடாது.

ராகாப் வேவுகாரர்களைக் காப்பாற்றியதை வேதம் மெச்சிக் கொள்கிறது. இந்தச் செயலை அவளது நீதியாகவே வேதம் சொல்கிறது. "ராகாப் என்னும் வேசியும் தூதர்களை ஏற்றுக்கொண்டு வேறுவழியாய் அனுப்பிவிட்ட பொழுது கிரியைகளினாலே அல்லவோ நீதியுள்ளவளாக்கப்பட்டாள்" (யாக் 2:25) என்று அவளது கிரியையைத் தேவன் மெச்சிக் கொள்கிறாரே. அப்படியானால் இந்தக் கிரிகைக்குக் காரணமானப் பொய்யையும் கடவுள் அங்கீகரிக்கிறாரா? இல்லை! இந்தச் செயல் பொய்யில் பிறந்தது அல்ல, விசுவாசத்தில் பிறந்தது. அவர்களைக் காட்டிக் கொடுக்கக் கூடாது. காப்பாற்றியே தீர வேண்டும் என்பது விசுவாசத்திலே பிறந்த தீர்மானம். ஆனால் அந்தத் தீர்மானத்தை நிறைவேற்றிய முறை பொய் சொன்னது. இந்த முறையைத் தேவன் மெச்சிக் கொள்ளவில்லை.

ராகாப்பைப் போல நாமும் பொய் சொல்லலாமா என்று கேட்கும் சகோதரியே! கொஞ்சம் கவனி. உனக்கு இன்று கிடைத்திருக்கும் சத்திய வேதம் அவளுக்குக் கிடைக்கவில்லை. உன்னைப்போல அவள் எந்தச் சபையிலும் அங்கம் வகிக்கவில்லை. நீ கர்த்தரை முழுவதும் அறிந்தவள். அவளோ தேவனை அறியும் அறிவில் ஆரம்ப நிலையில் இருந்தாள். நீ பரிசுத்தவான்களின் கூட்டத்தில் இருக்கிறாய். அவளோ அஞ்ஞானிகளின் மத்தியில் இருக்கிறாள். முழு வெளிச்சம் இல்லாததால், அஞ்ஞானப் பட்டணத்துவாசியாக அவள் பொய் சொன்னது நமக்கு முன் உதாரணம் அல்ல.

ஆவிக்குரிய காரியங்களில் அனுபவரீதியாக அவளுக்கு முழு அறிவு இல்லை. முழு சத்தியம் அறியா நிலையில்தான் அன்று ராகாப் இருந்தாள். "அறியாமையுள்ள காலங்களைத் தேவன் காணதவர் போலிருந்தார்" (அப் 17:30) என்ற உண்மையின்படி ராகாப்பின் பாவத்தை – பொய்யைக் கர்த்தர் கண்டார், அவளது அறியாமையைக் கண்டு அதனைக் காணாதவர்போல இருந்தார். நம் பொய்யைக் கண்ட அவர் காணாதவர் போலிருக்க மாட்டார், ஏனெனில் நாம் வாழ்வது அறியாமையுள்ள காலமல்லவே!

## 6. ராகாப் கண்டுபிடித்த உண்மைகள் :

ராகாப்பின் விசுவாசம் வெறும் உணர்வுகள் அல்ல, உண்மைகள். இஸ்ரவேலரின் கர்த்தர் செய்த அற்புதங்களைக் கேட்ட அவள், தான் தேவ தண்டனையில் இருப்பதை முதலாவது கண்டாள்.

இந்த அறிவு நமக்கு வேண்டும். நம்முடைய அன்றாடக வாழ்க்கையில் நம் சொல், செயல், சிந்தனை தேவ தண்டனையை வரவழைத்துவிடுமோ என்று நாம் தினமும் ஆவிக்குரிய விழிப்போடு வாழவேண்டும். தன்னைத்தானே இரட்சிக்க முடியாது என்பதை அவள் உணர்ந்தாள். தான் எடுக்கும் தீர்மானங்களோ, புண்ணியக் காரியங்களோ தன்னை இரட்சிக்காது என்பதை உணர்ந்தாள். தர்மம் தலை காக்காது என்ற உண்மையை அறிந்தாள்.

நற்கிரியைகள் நம்மைப் பரலோகம் கொண்டு சேர்க்காது. நற்கிரியைகள் பரலோகில் நமக்குப் பாராட்டுகளைப் பெற்றுத் தரும். ராகாப் பரலோகம் வருவது கர்த்தர்மேல் வைத்த விசுவாசத்தினால், பரலோகில் பாராட்டு பெறுவது அவள் வேவுகாரர்களைத் தப்புவித்த கிரியையினால்.

எரிகோவின் பிரமாண்ட அலங்கங்கள் தனக்குப் பாதுகாப்பல்ல என்பதை அவள் உண்ந்தான். ஆம், நம் மதமோ, கல்வியோ, கலாச்சாரமோ, நாகரீகமோ, ஆஸ்தியோ, புகழோ இவையொன்றும் நமக்குப் பாதுகாப்பல்ல. இயேசுவின் இரத்தம் மாத்திரமே பாதுகாப்பு.

எரிகோ பட்டணத்திற்குள் இரட்சிப்பின் வழி இல்லை; பட்டணத்திற்கு வெளியே இருந்துதான் தனக்கு இரட்சிப்பு வரும் என்பதை அவள் உணர்ந்தாள்.

நமக்குள் இருக்கும் அன்பு, நற்குணம், சாந்தம் இவை வழியாய் நமக்கு இரட்சிப்பு வராது. நமக்கு வெளியே இருந்து, நம்மை நோக்கி வரும் தேவ கிருபையே நம்மை இரட்சிக்கிறது.

## 7. ராகாப்பின் விசுவாசத்தின் பலன்:

ராகாப்பின் விசுவாசத்தினால் அவள் எதிரியின் தாக்குதலில் சேதமாகாதிருந்தாள். விசுவாசத்தினாலே ராகாப் என்னும் வேசி, கீழ்ப்படியாதவர்களோடே சேதமாகாதிருந்தாள். (எபி 11:31) அவள் சேதமாகாதிருக்கக் காரணம் அவளுடைய விசுவாசம். விசுவாசம் என்றால் நல்ல தீர்மானம் எண்ணங்கள் சிந்தனைகள் ஆகிய மனப்பயிற்சி அல்ல. அந்த விசுவாசம் கிரியையில் வெளிப்பட வேண்டும்.

முதலாவது அவள் விசுவாசத் துரோகம் நேரிடாதபடி தன்னைக் காத்துக்கொள்ள வேண்டும். “எங்கள் காரியத்தை (நீ) வெளிப்படுத்ததாதிருந்தால்... நாங்கள் தயையும், சத்தியமும் பாராட்டுவோம்” (யோசு 2:14) என்று வேவுகாரர்கள் அவளிடம் சொன்னபடி நடந்துக் கொண்டாள். முடிவுபரியந்தம் அவள் நிலைநின்றாள்.

ஓர் சிவப்பு நூல் அவள் வீட்டில் தொங்கியது. இந்த அடையாளமே அவளைக் காப்பாற்றியது. வீடுகள், அலங்கங்கள் எரிகோவில் அழிந்து தரைமட்டமாக்கப்பட்டன. அழிவிற்கு மத்தியில் ஒரு வீடு அழியாமல் நின்றது. அதுதான் ராகாப்பின் வீடு! அந்த வீட்டில் ஓர் சிவப்பு நூல் தொங்கிக் கொண்டிருந்தது! நம்முடைய வீடுகளில் இந்த சிவப்பு நூல் தொங்குகிறதா? இயேசுவின் இரத்தத்திற்குள் நாம் இருக்கிறோமா? எரிகோ கோட்டைக்குள் ராகாப்பின் இரட்சிப்புக்கு சாட்சி, சிவப்பு நூல், எரிகோவிற்கு வெளியே அவளுடைய இரட்சிப்புக்கு அடையாளம். அவளுடைய புதிய வாழ்க்கை!

நம்முடைய இரட்சிப்பிற்கு உத்திரவாதம் தேவ வசனங்கள் மட்டுமல்ல, நம் இருதயத்தில் நிலவும் தேவ சமாதானம் மட்டுமல்ல, பிறர் காணும்படியான நம்முடைய புதிய வாழ்க்கையே இரட்சிப்பு பெற்றதிற்கு உண்மையான அடையாளம்.

ராகாப் புதிய சிருஷ்டி! பாவச் சேற்றில் மலர்ந்த அழகிய இரட்சண்ய மலர்! அந்த மலர் இன்றும் தேவனை அறியும் வாசனையைப் பரப்புகிறது.

# நூலிலிருந்து...



முட்களுக்குள் மலர்ந்திருக்கும் நம் வாழ்க்கை, கண்ணீர்ப் பாதையைக் கடக்கும் மற்ற தேவப்பிள்ளைக்கு களைத்த நேரங்களில் அப்பமாகும்! நம் வாழ்க்கை மற்றவர்களை ஆற்றித்தேற்றும். வறுமை, வேதனை, நோய், அவமானம் என்று இப்படி முட்களால் சூழ்ந்திருப்போருக்கு, ஆத்துமப் பசி போக்கும் ஜீவ அப்பமாக மாறும்படி உன் ஆத்துமாவை முட்கள் ஊடுருவிப் போகும்! சங்கடப் பாதையை நீ கடக்கும்பொழுது, சஞ்சலப் பள்ளத்தாக்கில் நீ நடக்கும்பொழுது, உன் வாழ்க்கை எனும் தானியம் இடிக்கப்படுகிறது... ஜீவ அப்பமாக அது உயிர்பெறுகிறது.

அலெக்ஸாண்டர் வொயிட் என்பவர் எடின்பர்க்கில் நல்ல பிரசங்கி, வேதத்தின் ஆழத்தில் சென்று முத்துக்களை எடுத்துவரும் அருமையான சிந்தனையாளர். ஆனால் அவருடைய பிறப்பு கண்ணியக் குறைவானது. ஆம்! அவருடைய தாய் நெறிபுரண்ட வாழ்க்கையில்! மற்றவர்கள் அவருடைய தாயை இழிவாகப் பேசும்பொழுது அவர் ஆத்துமாவை அவமான முட்கள் கிழிக்கும். அப்பொழுதெல்லாம், தன் அழைப்பின் மலரை நோக்கிப் பார்த்து ஆறுதல் அடைவார். அவருடைய இடுக்கமான நேரங்களில் தேவனோடு நெருக்கமான உறவுகள் மலர்ந்தன.

அவர் பிரசங்கம் பண்ணிவிட்டு - தேவனது ஜீவ வார்த்தைகளை மக்களுக்கு கொடுத்துவிட்டு மனநிறைவுடன் செல்லும்பொழுது அவர் காதில் விழும் வார்த்தைகள், "நம் பாஸ்டர் ஒழுக்கக்கேட்டில் பிறந்த ஒரு பிள்ளை. He is an illegetimate Child." இந்த வார்த்தைகள் அவர் ஆத்துமாவில் முள்ளாய்க் குத்தும். அந்த அழுகைக்குப்பின், பிரசங்க மேடையினின்று புறப்படும் வார்த்தைகள் தேவ வல்லமையின் வார்த்தைகள்! பரிசுத்த ஆவியானவரின் அக்கினி அம்புகள். இப்படி அவர் பிரசங்க மேடை வெற்றி மலராக விளங்கியது; விடுதலை நறுமணம் பரவியது. இடிபட்ட அவரது உள்ளத்தில் உருவான கண்ணீரின் செய்தி, கேட்போருக்கு ஜீவ அப்பமாயிற்று. உன் வாழ்க்கையும் சோர்வுற்றோருக்கு ஜீவ அப்பமாக இருப்பதாக!.

**Saththiya Muzhakkam Ministries**

# 22, First West Cross Road, Gandhi Nagar,
Vellore - 632 006. Ph : 0416 - 2243554, 98432 43554.